website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 05 சனிக்கிழமை (18.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

# அரச ஊழியர்கள் அனைவரும் மே மாத சம்பளத்தில் அரைவாசியை தங்கி வாழ்வோருக்கு வழங்கினால் நாடு நன்மையடையும்

## ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர வலியுறுத்து



(கொழும்பு)
கொரோனா வைரஸின் இக்கட்டான சூழ்நிலையில் அரச ஊழியர்கள் அனைவரும் மே மாத சம்பளத்தில் அரைவாசியை தங்கி வாழ்வோருக்கு வழங்கினால் நாடு நன்மையடையும் என ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசின் மாதாந்த சம்பளப் பட்டியல் 80 பில்லியன் ரூபாயாகும். அதாவது 8 ஆயிரம் கோடி ரூபாயாகும் என பீ.பி ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

அரச கூட்டுத்தாபனங்கள், வங்கி மற்றும் 02

### அரச சேவைகள் சீராகும்வரை
## சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான செல்லுபடிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)
கோவிட் - 19 தொற்று நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு அரச சேவைகள் சீராக ஆரம்பிக்கப்படும் வரை காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலத்தை நீடிக்குமாறு அமைச்சர் மகிந்த அமரவீர, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மார்ச் 10ஆம் திகதி முதல் சாரதி அனுமதிப் 02

### தற்போதைய சூழ்நிலையில்
# யாழில் ஊரடங்கை தளர்த்த முடியாது
### பலாலியில் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ண



(யாழ்ப்பாணம்)
**தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டத்தினை அகற்றுவது என்பது சாத்தியமற்ற விடயம் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண யாழ்.பலாலியில் வைத்து தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வருகை தந்த பாதுகாப்புச் செயலாளர், யாழ்ப்பாணம் பலாலி விமானப்படைத்தலைமையகத்தில் பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப்படை, 02

### அனலைதீவைச் சேர்ந்த சகோதரர்கள்
## கொரோனா வைரஸால் பிரித்தானியாவில் உயிரிழப்பு
### இரு நாள் இடைவெளியில் துயரம்





(லண்டன்)
பிரித்தானியாவில் புலம்பெயர்ந்து வசிக்கும் அனலைதீவைச் சேர்ந்த அண்ணனும் தம்பியும் 02

### அபாயமற்ற பகுதிகளில்
## எதிர்வரும் திங்கள் முதல் ஊரடங்கைத் தளர்த்த வாய்ப்பு

(கொழும்பு)
கொரோனா இடர் வலயத்தில் உள்ளடக்கப்படாத பகுதிகளில், எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம், பகலில் ஊரடங்குச் 02

## கோப்பாயில் 50 பேர் கைது




வாழைக்குலையையும் விட்டு வைக்காத கடமை தவறாத பொலிஸார்! 02

## 122 கிலோ கஞ்சாவுடன் மன்னாரில் மூவர் கைது

(மன்னார்)
மன்னார் குதிரைமலை கடற்பகுதியில் 122 கிலோ கேரளா கஞ்சா பொதி களுடன் கற்பிட்டியை சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் குதிரை மலைக் கடற்பரப்பினூடாக கண்ணாடி இழை படகு மூலம் இந்தியாவில் இருந்து இலங்கை 02

### கொரோனா தொடர்பில்
## முகப்புத்தகத்தில் வதந்தி பரப்பிய பெண் ஒருவர் கைது

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் 02

## காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடி போராடிய தந்தை
### முல்லையில் உயிரிழப்பு



(முல்லைத்தீவு)
காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி, போராடிய தந்தை ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். 03

## கொரோனா 244

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸ் 02

### ஏப்ரல் 20ஆம் திகதிக்கு பின்னர்
## அத்தியாவசிய தேவைக்கு மாத்திரம் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தலாம்

(கொழும்பு)
அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் நடைமுறை இரண்டு வாரங்களுக்கு நடை முறைப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

ஏப்ரல் 20ஆம் திகதிக்குப் பின்னர் இரண்டு 02

### சட்டவிரோதமாக
## ஆட்டினை இறைச்சியாக்கிய இருவர் கைது

(கொடிகாமம்)
கொடிகாமம் பொலிஸ் 03

## அரச ஊழியர்கள்...

பல்கலைக்கழகங்களை சேர்த்துப் பார்க்கும் போது அது சுமார் 90 பில் லியன் முதல் 100 பில்லியன் வரையாகும்.

கோவிட் - 19 தொற்றுக்கு மத்தியில் வறிய மற்றும் இடர் நிலைக்குள்ளாகியுள்ள மக்களின் சுகாதார மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி வழங்கும் தூரநோக்கு தலைமைத்துவம் ஏனைய நாடுகளைப் பார்க்கிலும் சிறப்பானதாகும்.

எனவே அவரது முயற்சிக்கு உதவு வதற்காகத்தான் இந்த தீர்மானத்தை எடுத்ததாக ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து அரச ஊழியர்களும் தமது சம்பளத்தில் அரைவாசியையேனும் தங்கி வாழ்வோருக்கு நன்மை பயக்கும் விதத்தில் அரச ஊழியர்களின் விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத்திற்கு ஒப்படைத்தால் மே மாதம் அரசின் செலவு 50 பில்லியன் ரூபாயினால் குறைந்து வரவு செலவுத்திட்ட துண்டு விழும் தொகை ஒரு மாதத்தில் 100 பில்லியன் ரூபாயினால் குறைவடையும் என பீ.பி ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார் என்றுள்ளது. (ம-3)

## கொரோனா...

கொரோனா தொற்றிற்கு இலக்காகி அடுத்தடுத்து இருநாள் இடைவெளியில் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் அனலைதீவு 4ஆம் வட்டாரம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் உலகநாதன் கடந்த திங்கட்கிழமை கொரோனா தொற்று நோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் அவரின் சகோதரரான ஆனந்தன் சுப்பிரமணியம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொரோனா தொற்றிற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

பிரித்தானியாவில் ஈழத் தமிழர்கள் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்து வருகின்றமை தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தையும் ஆழ்ந்த துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ம-3)

## முகப்புத்தகத்தில்...

முகப்புத்தகத்தில் வதந்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திவுல்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய பெண் ஒருவரே குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வதந்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டில் கடந்த மார்ச் 25ஆம் திகதி தொடக்கம் நேற்றுவரை இரு பெண்கள் உட்பட 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தின் கணினி குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது. (ம-3)

## கோப்பாயில் 50...

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் நிலைய பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடிய குற்றச்சாட்டில் கடந்த இரு நாட்களில் 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடினர் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் உரிய அனுமதி இன்றி ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஊரடங்கு அனுமதிப்பத்திரமின்றி வியாபாரத்தில் ஈடுபட்ட 10இற்கும் மேற்பட்டவர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாடு செல்ல கொழும்புக்கு புறப்படுவதாகத் தெரிவித்த பெண் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஊரடங்குச் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 19 பேரும் நேற்று பிற்பகல் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், வரும் ஜூலை மாதம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுமாறு தவணையும் வழங்கப்பட்டது.

இதேவேளை, வீட்டுத் தோட்டத்தில் விளைந்த மரக்கறிகளை விற்பனை செய்ய விடாமல் பொலிஸார் தடுத்த சம்பவம் குறித்து பொதுமக்கள் விசனமடைந்துள்ளனர்.

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் உள்ளவர்கள் தமது வீட்டுத் தோட்டத்தில் விளையும் கத்தரி, மரவள்ளி, வாழைக்காய் போன்ற பொருட்களை வீட்டு வாசலில் வைத்து விற்பனை செய்து வந்துள்ளனர்.

நேற்று காலையும் வழமை போல் தமது தோட்டத்திலிருந்து காய்கறிகளைப் பறித்து வந்து வாசலில் சிறு மேசை ஒன்றில் விற்பனைக்காக வைத்திருந்தபோது, கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வாகனத்தில் வந்த பொலிஸார் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தியதுடன் அவர்கள் விற்பனைக்காகப் பயன்படுத்திய தராசையும் பறித்துச் சென்றுள்ளனர்.

நாட்டின் ஜனாதிபதி உட்பட அதிகாரத் தரப்பினர், நாட்டில் எழுந்துள்ள நிலைமையை எதிர்கொள்ளும் வகையில் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்குவித்துக் கொண்டிருக்கும் நிலையில் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கு இடையூறாக பொலிஸார் செயற்பட்ட விதம் சம்பவத்தை நேரில் பார்த்த பொதுமக்களை முகம் சுழிக்க வைத்துள்ளது. (ம-3,114)

## சாரதி அனுமதிப்...

பத்திரம் காலாவதியாகும் சாரதிகள், அதனை புதுப்பிப்பதற்கான காலக் கெடு ஏப்ரல் 15ஆம் திகதிவரை முன்னர் வழங்கப்பட்டது.

எனினும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரம்பலைக் கட்டுப்படுத்த அரசு முன்னெடுத்துள்ள ஊரடங்கு உள்ளிட்ட கட்டுப்பாடுகள் நேற்று வரை தளர்த்தப்படவில்லை.

அதனால் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகம் செயற்படவில்லை. அதுதொடர்பில் சாரதி அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் காலம் குறித்து அமைச்சர் அமரவீர நேற்று கோவிட் - 19 தொற்று நோய் தொடர்பில் சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

தொற்று நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நாட்டின் அனைத்து சேவைகளை மீண்டும் தொடங்குவதற்கு உரிய திகதியை தற்போது வழங்க முடியாது என்று சுகாதார அதிகாரிகள், அமைச்சரிடம் சுட்டிக் காட்டினர்.

எனவே கோவிட் - 19 தொற்று நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு அரச சேவைகள் சீராக ஆரம்பிக்கப்படும் வரை காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலத்தை நீடிக்குமாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளுக்கு, அமைச்சர் மகிந்த அமரவீர அறிவுறுத்தல் வழங்கினார்.

இதுதொடர்பில் பொலிஸார் உட்பட பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிக்குமாறும் அவர் அதிகாரிகளைப் பணித்தார்.

கொரோனா தொற்றுநோயுடன் மோட்டார் போக்குவரத்துத் துறையின் தினசரி இழப்பு சுமார் 3 மில்லியன் ரூபாய் என்று கூட்டத்தில் தெரியவந்தது.

இதேவேளை, மோட்டார் போக்குவரத்து தலைமை அலுவலகத்தை வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை திறக்குமாறும் ஏனைய மாவட்ட அலுவலகங்களை 20ஆம் திகதிக்குப் பின்னர் திறக்குமாறும் அமைச்சர் மகிந்த அமரவீர அறிவுறுத்தல் வழங்கினார். (ம-3)

## எதிர்வரும் திங்...

சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தினமும் காலை 6 மணிக்கு ஊரடங்கு சட்டத்தை நீக்கி மீண்டும் இரவு 8 மணிக்கு அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் கொரோனா இடர் வலயமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

காலை நேரங்களில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும் அரசாங்க சேவைக்கு 20 வீதமான அரச ஊழியர்கள் மாத்திரமே அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும் தனியார் துறையினர் பணி செய்வதற்கான நேரமாக காலை 10 மணி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் பிரிவின் அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அனைத்து ஊழியர்களும் இரவு 8 மணிக்குள் அவர்கள் வீடுகளுக்கு செல்ல வேண்டும் என்பதுடன், 8 மணியிலிருந்து காலை 6 மணி வரை மீண்டும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதேவேளை அடுத்த வாரம் முதல் பகுதியளவில் இலங்கையை வழமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## யாழில் ஊரடங்கை...

கடற்படை மற்றும் விமானப் படையினரை சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் பின்னர், ஊடகவியலாளர்களினால் ஊரடங்கு தளர்த்தப்படுவது தொடர்பில் கேட்கப்பட்டபோதே இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இம்மாவட்டத்திலிருந்து வைரஸ் தொற்றுக்கு உள்ளான அதிகமானவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அதிக எண்ணிக்கை எனும்போது ஏனைய நாடுகளில் அறிக்கையிடப்படுவதைப்போன்று இல்லாவிட்டாலும் எமது நாட்டில் அறிக்கையிடப்படும் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அளவானவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் வைரஸ் தொற்றுக்கு உள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டது. இது குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும்.

எனவே, தற்பொழுது கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமான தொற்றாளர்கள் அறிக்கையிடப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்தாக களுத்துறை மாவட்டம், கம்பஹா மாவட்டம் அதற்கு அடுத்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டம் காணப்படுகிறது.

சனத்தொகையின் அடிப்படையில் பார்க்கும்போது யாழ்ப்பாணம் மாவட்டம் அதிகளவான மக்கள் வசிக்கும் பிரதேசமாகும்.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் பொதுமக்கள் மத்தியில் இந்த வைரஸ் தொற்று ஏற்படுவதை நாம் விரும்பவில்லை.

எனவே, மக்களுக்கு ஓரளவு இடையூறுகள் ஏற்பட்டாலும் நோய் பரவாமல் சரியாக அதனைக் கட்டுப்படுத்தும் சூழ்நிலை ஏற்படும்வரை ஊடரங்குச் சட்டத்தை தளர்த்துவது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

யாழ்.குடாநாட்டு மக்களிடம் இரண்டு விடயங்களை முன்வைக்கின்றோம். நாம் வழங்கும் ஆலோசனைகள் மற்றும் சுகாதாரப் பிரிவினர் வழங்கும் ஆலோசனைகளுக்கு அமைய வீடுகளுக்குள் இருங்கள்.

அதேநேரம், யாராவது ஒருவருக்கு நோய் தொற்றுக்கான அறிகுறி இருந்தால் அதுபற்றி உண்மையை மறைக்காது உரிய தரப்புக்கு தெரிவியுங்கள். நீங்கள் யாரைச் சந்தித்தீர்கள், எங்கு சென்றீர்கள் போன்ற உண்மைத் தகவல்களை வழங்குங்கள் என்ற கோரிக்கையையும் நான் முன்வைக்கின்றேன்.

அப்படி உண்மையைத் தெரிவிக்கும் போது அவ்வாறானவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த முடியும்.

நாம் உங்களுக்கு உதவி செய்ய முயற்சிக்கின்றோம். அதற்கு ஒத்துழைப்பு வழங்குவது மக்களின் பொறுப்பாகும் என்றார். (ம-3,101)

## 244...

தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 244 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றைய தினம் மேலும் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 77 பேர் முழுவதுமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

7 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போது 164 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

## 122 கிலோ...

க்கு கேரளா கஞ்சா கொண்டு வரப்படுவதாக சிலாவத்துறை கடற்படை மற்றும் விசேட அதிரடிப்படை (எஸ்.ரீ.எப்) மற்றும் போதை வஸ்து தடுப்புப் பிரிவினர் ஆகியோருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றது.

இதன்போது விரைந்து செயற்பட்ட சிலாவத்துறை கடற்படை மற்றும் விசேட அதிரடிப்படையினர் 122 கிலோ 460 கிராம் கேரளா கஞ்சா மற்றும் படகில் கடத்தலில் ஈடுபட்ட கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 3 சந்தேக நபர்களையும் கடலில் வைத்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்கள், கண்ணாடி இழை படகு மற்றும் மீட்கப்பட்ட கேரளா கஞ்சா என்பன சிலாபத்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட சிலாபத்துறை பொலிஸார் கைது செய்யப்பட்ட நபர்களை நேற்று வெள்ளிக்கிழமை மாலை மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரனைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் எம்.கணேசராஜா குறித்த நபர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3,285)

## அத்தியாவசிய...

வாரங்களுக்கு இந்தக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படும் என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இதேவேளை, பொதுப் போக்குவரத்தைத் தொடங்குவதற்கு முன் மக்கள் கூட்டம் குறித்து குறிப்பிட்ட கவனம் செலுத்தி வழிகாட்டுதல்களை வெளியிடுமாறும் அரசிடம் வலியுறுத்தப்பட்டது.

கோவிட் - 19 நோய்த் தொற்று இல்லாத மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துவதற்கான உத்திகளை அரசு கருதுவதால், பயணிகள் போக்குவரத்தை எவ்வாறு பாதுகாப்பாக நிர்வகிப்பது என்பது குறித்து இலங்கை வணிக மன்றம் அரசிடம் ஒரு முன்மொழிவைச் சமர்ப்பித்தது.

இந்நிலையில் இந்த அறிவிப்பை போக்குவரத்து அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

தொடருந்து மற்றும் பேருந்து சேவைகளில் பின்வரும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

சுகாதார மற்றும் பாதுகாப்பு பிரிவு வழங்கிய வழிமுறைகளை கண்டிப்பாக செயற்படுத்துதல்

ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் பயணிகளின் உடல் வெப்பநிலையை அளவிடவும், எந்தவொரு நபருக்கும் காய்ச்சல், இருமல் அல்லது சளி இருந்தால், உடனடியாக சுகாதாரத் துறையின் வழிமுறைகளைப் பின்பற்றவும்.

அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே பயணிகள் போக்குவரத்து சேவைகளை வழங்குதல்.

ரயில்வே கட்டளைச் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்

03

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

## அத்தியாவசிய...

படுத்தல். அதன்படி, ரயில் நிலையத்திலோ அல்லது பேருந்து நிலையத்திலோ துப்புவது, ரயில் நிலையத்திலோ அல்லது முற்றத்திலோ வர்த்தகம் செய்வது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டு, அத்தகைய சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சுகாதார மற்றும் பாதுகாப்பு பிரிவின் அறிவுறுத்தலின்படி, கட்டாயமாக முகக்கவசம் அணிவது மற்றும் பேருந்துகள் மற்றும் தொடருந்துகளில் பயணிக்கும் பயணிகள் மீது ஒரு மீற்றர் இடைவெளி போன்ற சுகாதார பரிந்துரைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்க.

ஒவ்வொரு ரயில் நிலையம், படுக்கை அறை மற்றும் பேருந்து ஆகியவற்றை ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது கிருமி நீக்கம் செய்ய தேவையான கிருமி நாசினியை வழங்கவும்.

அத்தியாவசிய சேவைகள் இல்லாத தொடருந்துகளிலோ பேருந்துகளிலோ யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. சிலர் பயணிக்க ஆசைப்படக்கூடும், அத்தகையவர்களுக்கு போக்குவரத்து வழங்குவதில்லை.

இம் மாதம் 20ஆம் திகதி நியமிக்கப்படவுள்ள குழு, இந்த விவகாரத்தை அமைச்சருடன் வரும் 22ஆம் புதன்கிழமை விவாதித்து அது குறித்து அரசுக்கு தெரிவிக்க வேண்டும்.

அதன்படி, கோவிட் - 19 தொற்று நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசின் உதவியுடன் பொதுப் போக்குவரத்து சேவை மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

இதனால் பயணிகள் எந்தவித துன்புறுத்தலும் இல்லாமல் பயணிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ம-3)

## ஆட்டினை...

பிரிவுக்கு உட்பட்ட மீசாலை மேற்கு பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஊரடங்கு வேளையில் சட்டவிரோதமான முறையில் ஆட்டினை இறைச்சியாக்கிய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் ஆட்டினை இறைச்சியாக்குவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலினை அடுத்து அங்கு சென்ற சாவகச்சேரி பொலிஸார் இரு இளைஞர்களைப் பிடித்துள்ளனர்.

அகப்பட்ட இரு இளைஞர்களையும் கொடிகாமம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப் போவதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,114)

## காணாமல்...

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, முதலாம் வட்டாரம், கைவேலி, 50 வீட்டுத் திட்டம் பகுதியைச் சேர்ந்த பொன்னையா நாகராசா என்பவரே உயிரிழந்துள்ளார்.

நாகராசா பிரதாஸ் (காணாமல்போன போது வயது - 18) என்ற இவரது மகன், 2009.3.23ஆம் திகதி பொக்கணை பகுதியில் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக மகனைத் தேடி அனைத்து போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்தார்.

ஒரு மகளை நாட்டுக்காக அர்ப்பணித்து விட்டு மற்றைய மகனையும் தொலைத்த குறித்த தந்தை பல்வேறு இன்னல்களுடனும் ஏக்கங்களுடனும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (ம-3)


உங்கள் விளம்பரங்களை
வலம்புரி இல் பிரசுரிப்பதற்கு
எம்முடன் தொடர்பு கொள்க
076 097 3127
076 636 3378
Valampurii@yahoo.com
குறைந்த கட்டணங்களில் பிரசுரிக்க முடியும்


# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 244 | 077 | 007 | 160 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 2,223,240 | 567,279 | 152,328 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 2,223,240 | 60,899 | 152,328 | +6,857 |
| ஐ.அமெரிக்கா | 690,900 | 13,330 | 35,955 | +1,338 |
| இத்தாலி | 172,434 | 3,493 | 22,745 | +575 |
| ஸ்பெய்ன் | 188,093 | 3,145 | 19,613 | +298 |
| சீனா | 82,692 | 26 | 4,632 | 0 |
| ஜேர்மனி | 139,134 | 1,436 | 4,203 | +151 |
| பிரான்ஸ் | 147,969 | 1,909 | 18,681 | +761 |
| ஈரான் | 79,494 | 1,499 | 4,958 | +89 |
| ஐ.இராச்சியம் | 108,692 | 5,599 | 14,576 | +847 |
| இந்தியா | 13,835 | 405 | 452 | +4 |

இன்று அதிகாலை 1.10 நிலைவரப்படி

உன் மனச்சாட்சியே, உலகத்தைப் பார்க்கிற பெரியதும் உண்மையானதுமான நீதிபதி.
– மெக்கலின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஊரடங்கை அமுல்படுத்துவதற்காக தலைவிரித்தாடுகின்ற அநியாயங்கள்

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக உலக நாடுகள் இறுக்கமான கட்டுப்பாடுகளை அமுல்படுத்தியுள்ளன.

இதில் ஊரடங்கு உத்தரவு என்பது முக்கியமானதும் முதன்மையானதுமான நடைமுறையாக உள்ளது.

எனினும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்துவதற்காகப் பொலிஸார் எடுக்கின்ற நடவடிக்கைகளைப் பார்க்கும்போது மனிதாபிமானத்துடன் பொலிஸார் நடந்த கொள்ள மாட்டார்களா? என்றே எண்ணத் தோன்றும்.

அதிலும் ஊரடங்கு உத்தரவை மீறியவர்கள் மீது இந்தியப் பொலிஸார் நடத்துகின்ற தாக்குதல்களைப் பார்க்கும்போது இந்தியப் பொலிஸாரில் மனநோயாளிகள் பலர் இருப்பர் போல் தெரிகிறது.

அந்தளவுக்கு அவர்களின் நடவடிக்கைகள் மிருகத்தனமானவையாக கணிப்பிடக் கூடியவை.

அவர்கள் போல் இலங்கைப் பொலிஸார் நடந்து கொள்ளவில்லையாயினும் இலங்கைப் பொலிஸாரில் சிலர் ஊரடங்குச் சட்டத்தை மீறியவர்கள் மீது கடுமையாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்பதுடன் ஊரடங்கு வேளை ஒற்றைக் கதவில் திறந்திருந்த வர்த்தகர்களிடம் இலஞ்சம் பெற்றுக் கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்களும் பரவலாக முன்வைக்கப்படுகின்றன.

நாளாந்த சீவியத்துக்காக தெருவோரம் குந்தியிருந்து வெயிலில் காய்ந்து நான்கு மரக்கறியை விற்று தன் குடும்பத்தின் பசி ஆற்ற நினைத்த ஏழையிடம் இரண்டாயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்றுக் கொள்கின்ற பொலிஸார் இருக்கின்றபோது கொரோனா போன்ற கொடிய நோய்கள் எங்ஙனம் இல்லாது போகும் என்பதுதான் நம் கேள்வி.

இவை ஒருபுறமிருக்க, ஊரடங்கு வேளை நடமாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சம்பந்தப்பட்டவர்களின் வாகனங்களைப் பறிமுதல் செய்து அவற்றை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைப்பதானது மிகப் பெரும் அநியாயமாகும்.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும்போது அதனைப் பின்பற்றுவது கட்டாயமானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால் ஊரடங்கு வேளை நடமாடினர் என்ற குற்றச்சாட்டில் குறித்த நபர் மீது சட்ட நடவடிக்கையோ அல்லது எச்சரிக்கையோ செய்வதை விடுத்து; சம்பந்தப்பட்டவரின் வாகனத்தைப் பறிமுதல் செய்து அதனைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கும் போது,

தோல் இருக்கச் சுளை விழுங்கும் கூட்டம் அந்த வாகனத்தை அப்படியே கபளீகரம் செய்து விடும்.

ஆக, இது விடயத்தில் நீதிபரிபாலனம், அரச நிர்வாகிகள், அரசியல்வாதிகள் கவனம் செலுத்தி வாகனப் பறிமுதலை தவிர்க்க நடவடிக்கை எடுப்பது மிக மிக அவசியமாகும்.

# தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்திற்குக் கிடையாது -சந்திரசேன



(கொழும்பு)

சுகாதாரப் பிரிவினரது ஆலோசனைகளுக்கு அமையவே அரசாங்கம் செயற்படுகின்றது. பொதுத்தேர்தலைத் தொடர்ந்து பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது.

பொதுத்தேர்தல் எப்போது நடந்தாலும் பெரும்பாலான மக்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிப்பார்கள் என சுற்றாடல்துறை அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் ஒழிப்புக்காக அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்கள் பயனுடையதாகக் காணப்படுகின்றன.

எந்தநேரத்தில் நடத்தினாலும் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகவே நாம் உள்ளோம். தேர்தலைக் கண்டு அஞ்சுவதற்கான அவசியம் எமக்குக் கிடையாது.

பொதுத்தேர்தலை நடத்த அரசாங்கம் தயக்கம் கொள்வதாக எதிர்த்தரப்பினர் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சுகாதார சேவைப் பிரிவின் ஆலோசனைக்கு அமையவே அரசாங்கம் செயற்படுகின்றது.

தேர்தலை நடத்துவதற்கான தருணம் இது கிடையாது. என அறிவுறுத்தப்பட்டதால் தேர்தலுக்கான செயற்பாடுகள் இடை நிறுத்தப்பட்டன.

கொரோனா வைரஸ் பரவல் முதலில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். அதன் பின்னரே பொதுத்தேர்தல் நடத்தப்படும்.

பொதுத்தேர்தல் எப்போது இடம் பெற்றாலும் பெரும்பாலான மக்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தையே தோற்றுவிப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து இதுவரை 3 ஆயிரத்து 721 பேர் விடுவிப்பு

(கொழும்பு)

கொரோனா தடுப்பு தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட 222 பேர், நேற்றுக்காலை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இவர்கள் மீதான பி.சி. ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

கொரோனா தொற்றுக்குள்ளாகவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே இவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

இதவேளை கொவிட்-19 எதிர்பாரா பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் லெப் டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவின் காணொலிப் பதிவு நேற்று முன்தினம் 16 ஆம் திகதி மாலை ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டது.

அந்தப் பதிவில் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்ததாவது,

“கடந்த சில நாட்களில் , ஜாஎல - சீதுவெல்ல பகுதிகளில் பல கொவிட்-19 தொற்றுக்குள்ளான நபர்கள் இனங்காணப்பட்டனர்.

அவ்வாறு தொற்றுக்குள்ளான கிரேண்ட்பாஸ், நாகலகம் வீதியில் உள்ள நபர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய நபர்கள் சாம்பூர் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டனர்.இப்பரவலை மேலும் கட்டுப்படுத்துவதற்காக நாகலகம் வீதி பகுதி 16 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தப்பட்டது.

பனிச்சங்கேணி தனிமைப்படுத்தப்பட்ட மையத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட 20 பேர் பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் நேற்று முன்தினம் அவர்களது வீடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

தற்பொழுது, முப்படையினரால் நிர்வகிக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் மையங்களில் 1631 பேர் தனிமைப்படுத்தல்களில் உள்ளதுடன், முப்படையினரால் நிர்வகிக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் மையங்களிலிருந்து இதுவரை 3721 பேர் அவர்களது வீடுகளுக்குச் சென்றனர்.

80 பி.சி.ஆர். பரிசோதனை பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன, அதில் எவருக்குமே நோய் தொற்று ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டன. குறித்த நபர்கள் சுகாதார நடைமுறைகளுக்குப் பின்னர் வீடுகளுக்கு அனுப்பப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# முதியோர், சிறுவர் இல்லங்களில் தொற்று நீக்கல் நடவடிக்கை





(வவுனியா)

வவுனியாவில் விசேட அதிரடிப் படையினரால் சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களில் தொற்று நீக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

விசேட அதிரடிப் படையினரும் வவுனியா நகர சபையினரும் இணைந்து நேற்றுக் காலை இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கொரோனா வைரஸ் தொற்று தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தி தொற்றைத் தடுக்கும் வகையில் வவுனியா சிவன் சிறுவர் இல்லம், சிவன் முதியோர் இல்லம், அன்பகம் உள்ளிட்ட சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களில் இவ்வாறு தொற்று நீக்கல் செயற்பா டுகள் முன்னெடுக்கப்பட்டன. (இ-250)

# சாவகச்சேரியில் 21 பேர் கைது!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 21 பேர் கைது செய்யப்பட்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் தேவையின்றி வீதிகளில் சுற்றித் திரிந்தேரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி பகுதியில் ஏ-9 வீதியோடு இணையும் கிளை வீதிகளில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருவதுடன் அநாவசியமாக வீதிகளில் பயணிப்போரை எச்சரிக்கை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## இலங்கையின் கோரிக்கை மீளாய்வு





(கொழும்பு)

விரைவான கடன் வசதிக்கான இலங்கையின் கோரிக்கையை சர்வதேச நாணய நிதியம் இந்த வாரம் மீளாய்வு செய்யவுள்ளதாக தெரிவித்தது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆசிய மற்றும் பசிபிக் துறை ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்விகளுக்குப் பதிலளித்த போதே சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் இயக்குநர் சாங்யாங் ரீ, சர்வதேச நாணய நிதியத்தின் விரைவான கடன் வசதித் திட்டம் குறித்து இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஒரு கடிதம் வந்துள்ளதை தெரியப்படுத்தியதுடன், இந்த வாரம் அதுதொடர்பில் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாவும் உறுதிப்படுத்தினார். (இ)

# ஒரேநாளில் 2,000 பேர் மரணம் அமெரிக்காவில் கொரோனாவால் பலி 35 ஆயிரத்தைத் தாண்டியது

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் 2 ஆயிரத்து 165 பேர் உயிரிழந்தனர். இதனால் அங்கு வைரஸுக்கு பலியானோர் எண்ணிக்கை 35 ஆயிரத்தைத் நெருங்கியது.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் 210 நாடுகளுக்குப் பரவியது. இந்தக் கொடிய வைரஸுக்கு தற்போதுவரை தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படாததால் மனிதப் பேரழிவு ஏற்பட்டு வருகிறது.

உலகம் முழுவதும் 21 இலட்சத்து 81 ஆயிரத்து 43 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 5 இலட்சத்து 47 ஆயிரத்து 14 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்தனர். ஆனாலும் இந்தக் கொடிய வைரஸுக்கு இதுவரை ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 457 பேர் பலியாகினர்.

கொரோனா வைரஸ் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டாலும் அமெரிக்காவில் கோரத்தாண்டவமாடி வருகிறது. வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கையிலும் பலி எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில் நேற்றுக்காலை நிலவரப்படி அமெரிக்காவில் 6 இலட்சத்து 77 ஆயிரத்து 482 பேருக்குக் கொரோனா பரவியது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் புதிதாக 29 ஆயிரத்து 479 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.



மேலும் அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் மட்டும் 2 ஆயிரத்து 165 பேர் பலியாகினர். இதனால் அமெரிக்காவில் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 34 ஆயிரத்து 608 ஆக அதிகரித்தது.

இந்நிலையில் நேற்று மாலை 6 மணி நிலவரப்படி அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 35 ஆயிரத்தைத் தாண்டியது. (இ)

# கொரோனாவிடமிருந்து மதுபானம் பாதுகாக்காது

## உலக சுகாதார நிறுவனம் திட்டவட்டம்

(கொல்கத்தா)

கொரோனா வைரஸிடமிருந்து மதுபானம் பாதுகாக்கும் என சமூக வலைத்தளங்களில் தவறான தகவல்கள் பரவி வந்த நிலையில் அதை உலக சுகாதார நிறுவனம் அதைத் திட்டவட்டமாக மறுத்தது.

எந்தவகை மதுபானமும் உடல் நலத்துக்கு கெடுதல் ஏற்படுத்தக் கூடியதுதான் எனவும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியது.

உலகளவில் ஆண்டுக்கு 30 இலட்சம் பேர் மதுபானங்களால் ஏற்படுகிற பாதிப்பால் மரணமடைகின்றனர். அதுதவிரவும் பல்வேறு பாதிப்புக்களை மதுபானங்கள் ஏற்படுத்துகின்றன. மதுப்பழக்கத்துக்கு அடிமையாகிறவர்கள் சிந்திக்கும் திறனையே இழந்து விடுகிறார்கள். பல்வேறு குற்றங்களைத் தயக்கமேயின்றி செய்து சட்டத்தின் பிடியில் சிக்குவதையும் பார்க்க முடிகிறது.

இந்நிலையில் உலகளவில் பல நாடுகளிலும் மதுபானங்கள் குடித்தால், அது கொரோனா வைரஸிடமிருந்து பாதுகாக்கும், கொரோனா வைரஸை மதுபானங்கள் கொன்று விடும் என்றெல்லாம் தவறான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டன.

இந்நிலையில் உலக சுகாதார நிறுவனம் :- இதெல்லாம் வெறும் கட்டுக்கதைகள்.

எந்த வகையிலும் மதுபானங்கள் கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து ஒருவரைப் பாதுகாக்காது.

மேலும், மதுபான பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கங்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இந்த நேரத்தில் மதுபானங்களை அருந்தினால், அது உடல் ஆரோக்கியத்தை வெகுவாகப் பாதிக்கும், வன்முறையில் ஈடுபடத் தூண்டும், உளநல பிரச்சினைகளையும் ஏற்படுத்தும்.

இது தொடர்பாக பொதுச் சுகாதாரத்தின் ஒரு பகுதியாக உலக சுகாதார நிறுவனம், உண்மையைக் கண்டறியும் ஆய்வை மேற்கொண்டது.

மதுபானம், கொரோனா வைரஸ் ஆகிய இரண்டையும் பற்றிய கட்டுக்கதைகளையும், உண்மைகளையும் ஆராய்ந்தது.

குறிப்பாக, அதிக போதை ஏற்படுத்தக்கூடிய மதுபானங்கள், கொரோனா வைரஸை கொல்கிற வலிமையைக் கொண்டுள்ளதா? என்றெல்லாம் ஆராயப்பட்டது.

அதன்முடிவில், கொரோனா வைரஸ் தொடர்பான வழிகாட்டுதல்களை உலக சுகாதார நிறுவனம் வழங்கியது.

அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

அதிகமான வலிமை கொண்டுள்ள மதுபானங்களைக் குடித்தால் அது கொரோனா வைரஸை கொல்லும் என்பது கட்டுக்கதை. இதில் உண்மை இல்லை.

எந்த வகை மதுபானங்களைப் பருகினாலும், அவை பொதுவான ஆரோக்கியத்துக்கு தீங்கு ஏற்படுத்தும்.

எந்த நேரத்திலும் பொதுமக்கள் மதுபானங்கள் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருகிற காலகட்டத்தில் மது பானங்கள் குடிப்பதை தவிர்க்க வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# அமெரிக்காவில் 3 கட்டங்களாக ஊரடங்கு தளர்வு

## ஆளுநர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தார் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் பாதிப்பு இல்லாத இடங்களில் ஊரடங்கைப் படிப்படியாகத் தளர்த்துவதற்கான பொறுப்பை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், மாநில ஆளுநர்களிடம் ஒப்படைத்தார்.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் பாதிப்பு உச்சத்தைத் தொட்டது. உலகிலேயே அமெரிக்காவில்தான் அதிக மக்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டனர். உயிரிழப்பிலும் அந்நாடு தான் முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை நிலவரப்படி அமெரிக்காவில் 6 இலட்சத்து 77 ஆயிரத்து 570 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. 34 ஆயிரத்து 617 பேர் உயிரிழந்தனர்.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் பொருளாதாரத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனைச் சரிசெய்து மீண்டு வருவதற்கான வழிமுறைகளை அரசு ஆராயத் தொடங்கியுள்ளது. அதிக பாதிப்பு இல்லாத இடங்களில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு வணிக நிறுவனங்கள் திறக்கப்படும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வரும் மாதங்களில் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது குறித்தும் மூன்று கட்டங்களாக ஊரடங்கைத் தளர்த்துவது குறித்தும் மாநில ஆளுநர்களுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் சில வழிகாட்டுதல்களை வழங்கினார்.

மாநிலங்கள் படிப்படியாக ஊரடங்கைத் தளர்த்திக்கொள்ளலாம் என்றும், மத்திய அரசின் உதவியுடன் அந்தந்த மாநில ஆளுநர்களே இதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளலாம் என்றும் ட்ரம்ப் உறுதியளித்தார். (இ)

# ஆபிரிக்காவில் கிராமத்துக்குள் புகுந்து பயங்கரவாதிகள் கொடூரத் தாக்குதல்

## பெண்கள், குழந்தைகள் உட்பட 22 பேர் பலி

(கின்ஷாசா)

ஆபிரிக்காவில் கிராமத்துக்குள் புகுந்து பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 22 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

ஆபிரிக்க நாடான கொங்கோவில் பல்வேறு பயங்கரவாதக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இந்தப்பயங்கரவாதிகள் அப்பாவி மக்களைக் குறிவைத்து அவ்வப்போது கொடூரத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் அந்த நாட்டின் கிழக்கு மாகாணமான இத்தூரியிலுள்ள கோலி என்ற கிராமத்துக்குள் நள்ளிரவில் ஏராளமான பயங்கரவாதிகள் ஆயுதங்களுடன் புகுந்தனர்.

அவர்கள் வீடுகளுக்குள் உறக்கத்திலிருந்த அப்பாவி மக்களைத் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 22 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

இதனிடையே வடக்கு மாகாணம் கீவிலுள்ள பெனி நகரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். அவர்களுக்கு இராணுவத்தினர் தக்க பதிலடி கொடுத்தனர்.

இதில் 5 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். எனினும் பயங்கரவாதிகளின் தாக்குதலில் அப்பாவி மக்கள் 2 பேரும், 2 இராணுவத்தினரும் பலியாகினர். (இ)

### ஒரு இலட்சம் பேருக்கு வைரஸ் தொற்று

# தீவிரமடையும் கொரோனா திணறுகிறது இங்கிலாந்து

(லண்டன்)

இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்துள்ளதால் அந்நாட்டு மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் நிலவரப்படி, இங்கிலாந்தில் ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 93 பேருக்கு கொரோனா வைரஸ் பரவியது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 4 ஆயிரத்து 617 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும், அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 861 பேர் பலியாகினர். இதனால் இங்கிலாந்தில் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 729 ஆக அதிகரித்தது. (இ)

# இந்தியாவில் கொரோனா பாதிப்பு மே மாதம் உச்சத்தை அடையும்

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தாக்கம் மே மாதம் உச்சத்தை அடைய வாய்ப்புள்ளது என்றும் அதன்பின்னர் குறையும் என்றும் கணிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டவர்களைத் தனிமைப்படுத்தி தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. நோய் அறிகுறி உள்ளவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புள்ளவர்களும் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டனர். எனினும் நாளுக்கு நாள் பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்த வண்ணமுள்ளது.

இதே நிலை நீடிக்கும் பட்சத்தில் மே மாதம் முதல் வாரத்தில் கொரோனா வைரஸின் தாக்கம் உச்சத்தை அடையலாம் என்றும், அதன்பின்னர் குறையும் என்றும் மத்திய உள்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. ஊரடங்கை இப்போது இருப்பதை விட கடுமையாக நடைமுறைப்படுத்தினால் ஒட்டுமொத்த பாதிப்பு எண்ணிக்கை குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவிற்கு சீனாவிலிருந்து பெருந்தொகை மருத்துவ பரிசோதனைக் கருவிகள் வந்து சேர்ந்திருப்பதால் நாடு முழுவதும் சோதனை அதிகரிக்கப்படுகிறது. கடுமையான சுவாசப் பிரச்சினை தொடர்பான அறிகுறிகள் உள்ள அனைவருக்கும் சோதனை செய்யப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# உலகளவில் கொன்று குவிக்கும் கொரோனா வைரஸ் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்தை நெருங்கும் பலி!

(ஜெனிவா)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 45 ஆயிரத்தைக் கடந்தது.

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 210 நாடுகளுக்குப் பரவி பெரும் மனித இழப்பை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இந்தக் கொடிய வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் அந்த முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

இந்நிலையில் கொரோனாவுக்கு பலியானோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 45 ஆயிரத்தைக் கடந்தது.




நேற்றுப் பிற்பகல் நிலவரப்படி, உலகம் முழுவதும் 21 ,லட்சத்து 90 ஆயிரத்து 512 பேருக்கு வைரஸ் பரவியது. வைரஸ் பரவியவர்களில் 14 இலட்சத்து 56 ஆயிரத்து 314 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 57 ஆயிரத்து 58 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

மேலும், வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 5 இலட்சத்து 45 ஆயிரத்து 137 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்தனர். ஆனாலும், இந்தக் கொடிய வைரஸுக்கு இதுவரை ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 61 பேர் உயிரிழந்தனர்.

கொரோனாவுக்கு அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்த நாடு களின் விபரம் பின்வருமாறு:-

| நாடுகள் | பலி எண்ணிக்கை |
|---|---|
| அமெரிக்கா | - 33,903 |
| ஸ்பெயின் | - 19,130 |
| இத்தாலி | - 22,170 |
| பிரான்ஸ் | - 17,920 |
| ஜெர்மனி | - 3,867 |
| இங்கிலாந்து | - 13,729 |
| சீனா | - 3,342 |
| ஈரான் | - 4,869 |
| துருக்கி | - 1,643 |
| பெல்ஜியம் | - 4,857 |
| கனடா | - 1,191 |
| நெதர்லாந்து | - 3,315 |
| பிரேசில் | - 1,769 |
| சுவிஸ்சர்லாந்து | - 1,281 |
| ஸ்வீடன் | - 1,333 |

என்பனவாகும். (இ)

# மன்னாரில் ஊரடங்குச்சட்டத்தைத் தளர்த்தக்கோரி ஜனாதிபதிக்குச் சிபாரிசு கடிதம் அனுப்ப நடவடிக்கை



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்திக் கொள்வது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டு ஜனாதிபதிக்கு சிபாரிசு கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நெல் மற்றும் அரிசியின் உத்தரவாத விலையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்கள் கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக மீளவும் மில் உரிமையாளர்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்,மற்றும் தனியார் வர்த்தக நிலைய உரிமையாளர்களை அழைத்து கலந்துரையாடியிருந்தோம்.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட வெள்ளை நாடு மற்றும் வெள்ளைச் சம்பா அரிசிகளின் விலை வர்த்தமானி அறிவித்தலை விட அதிகமாக இருப்பதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் எனது கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளருடன் கலந்துரையாடினேன்.இதன் போது நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் மாவட்ட மட்டத்தில் தீர்மானத்தை எடுத்து அறிவித்தல் வழங்குமாறு கோரியிருந்தனர். அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டனர்.

வெள்ளை நாடு மற்றும் வெள்ளைச் சம்பா அரிசி மொத்த விலையில் 95 ரூபாவிற்கும் சில்லரையாக 100 ரூபாவிற்கும் விற்கத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த விலைக்கு மேலே எந்தவொரு பிரதேசத்திலும் கூடுதலாக விற்பனை செய்ய முடியாது.

மேலும் சிகப்பு மற்றும் வெள்ளை கீரிச் சம்பா அரிசிகள் நிவாரணத்திற்கு விநியோகிப்பது இல்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மாவின் உத்தரவாத விலை 86 ரூபாய். சீனி 125 ரூபாவிற்கு மேல் விற்பனை செய்ய முடியாது.

சோயாமீட்,தேயிலை,சவர்க்காரம் போன்றவை நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்ய வேண்டும்.குறித்த நடைமுறை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை எவ்வாறு தளர்த்திக் கொள்ளுவது என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அதற்கான சிபாரிசு கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வுள்ளது.

அந்த வகையில் சாதகமாக இருந்தால் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தி குறிப்பிட்ட எண்ணிக்கையில் அரச ஊழியர்களை அலுவலகங்களுக்கு அழைப்பது என்றும், சுழற்சி முறையில் வர்த்தக நிலையங்களைத் திறத்தல், அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல், சமூக இடைவெளிக்கு அமைவாக வியாபாரம் உட்பட ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் மக்கள் ஒன்று கூடுவதைத் தடுப்பது எனவும் மக்கள் முழுமையாக விடுகளிலிருந்து வெளியில் செல்லாது ஒரு வீட்டிலிருந்து ஒருவர் அல்லது இருவர் மாத்திரமே வெளியில் செல்வது என்றும் பொலிஸாரின் உதவியுடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மாலை 6 மணியுடன் மீண்டும் ஊரடங்குச் சட்டத்தை அமுல் படுத்துவது என்றும் சனி, ஞாயிறு தினங்களில் முழுமையாக மக்களைக் கட்டுப்படுத்தி ஊரடங்குச்சட்டத்தை அமுல்படுத்துவது என்றும் கொரோனா அச்சம் தணியும் வரை குறித்த செயற்பாட்டை நடைமுறைப் படுத்துவது என்றும் இதற்கான சிபாரிசை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கவுள்ளோம்.

இதற்கு சாதகமான பதில் கிடைக்கும் பட்சத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் குறித்த நடைமுறை அமுல் படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-285)

# உத்தியோகத்தரின் கடமைக்கு இடையூறு பணிக்கு செல்லாமல் செயலகத்திற்குள் முடங்கிய சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாலாவிப் பகுதியில் கடமையாற்றி வருகின்ற சமுர்த்தி உத்தியோகத்தரின் கடமைக்கு இடையூறு விளைவித்தோர் தொடர்பில் முறைப்பாடு செய்தும் கொடிகாமப் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் குற்றம்சாட்டினர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாலாவியில் சமுர்த்தி அலுவலகத்திற்கு சென்ற இரண்டு பெண்கள் தமக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனக்கூறி சமுர்த்தி உத்தியோகத்தருடன் முரண்பட்டு அவரது உடமைகளை எடுத்து எறிந்து அட்டகாசத்தில் ஈடுபட்டதுடன் அவரை அலுவலகத்தை விட்டு வெளியே செல்ல விடாமலும் தடுத்தனர்.

இந்நிலையில் குறித்த உத்தியோகத்தர் பின் வாயில் வழியாக தப்பித்து ஓடி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார்.

இருப்பினும் பொலிஸார் குறித்த உத்தியோகத்தரின் முறைப்பாட்டை ஏற்க மறுத்ததுடன் உத்தியோகத்தரையும் கைது செய்ய முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலரிடம் முறையிட்ட போதிலும் அவரும் அதீத கவனம் செலுத்தவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் தமக்கு பாதுகாப்பு இல்லாததால் தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நேற்று வெள்ளிக்கிழமை கடமைக்குச் செல்லாமல் பிரதேச செயலகத்திற்குள் முடங்கியிருந்தனர்.

அத்துடன் இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கும் கொண்டு சென்றனர்.

அரசாங்க அதிபரின் முயற்சியால் சாவகச்சேரி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு நேற்று வெள்ளிக்கிழமை மதியம் சென்று பணிக்குச் செல்லாமல் இருந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததாக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் உறுதிமொழியை அடுத்து தாம் கடமைக்குச் செல்ல உத்தேசித்திருப்பதாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (இ-30)

# இந்துக்குருமார் பேரவையால் முகக்கவசங்கள் கையளிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையால் மன்னார் பாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதனிடம் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஒரு தொகுதி முகக்கவசங்கள் மற்றும் கிருமி நீக்கி என்பன கையளிக்கப்பட்டன.

லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயத்தின் உதவியுடன் வவுனியா அந்தணர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையால் இந்த உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டன.

இதன்போது கொடிய கொரோனா வைரஸ் தாக்கத்தின் போது உன்னதமான பணியாற்றி வரும் மருத்துவத் துறைசார் உத்தியோகத்தர்கள் அனைவரது நலன் வேண்டியும் உலக மக்களின் நலன் வேண்டியும் பிரார்த்தனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)



# உடல் நிலை மோசமடைகிறது என்னை விடுதலை செய்யுங்கள் சவுதி இளவரசி வேண்டுகோள்



(ரியாத்)

சவுதி அரேபிய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளவரசி பஸ்மா பின்ட் சவுட் அல் சவுட் தன்னை விடுதலை செய்யுமாறு உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்.

இளவரசியின் உத்தியோகபூர்வ டுவிட்டர் மூலம் இந்த வேண்டுகோள் வெளியானது.

என்னை சவுதி அரேபியாவின் அல் ஹெயர் சிறையில் தன்னிச்சையாக தடுத்து வைத்துள ளனர். எனது உடல் நிலை மோசமடைகிறது .

நான் எந்தத் தவறும் செய்யவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

சவுதி அரேபியாவை 1953 முதல் 1964 வரை ஆட்சி புரிந்த மன்னர் சவுட்டின் இளைய மகளே பஸ்மா என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் கடந்த சில வருடங்களாக அரச குடும்பத்தினர் மத்தியில் மனிதாபிமான விவகாரங்கள் அரசமைப்பு சீர்திருத்தங்கள் போன்ற வற்றிற்கான குரல் கொடுப்பவர்களில் முக்கிய மானவராக மாறியிருந்தார்.

இந்நிலையில் திடீரென இளவரசி அவருடைய மகள்களுடன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

நாட்டிலிருந்து தப்பியோட முயன்ற வேளை அவர் கைது செய்யப்பட்டார் எனவும் தகவல்கள் வெளியாகியிரு ந்தன.

பின்னர் அவர் எங்கும் காணப்படாத நிலையிலேயே அவரின் இந்த டுவிட்டர் தகவல் வெளியாகியது.

எந்தவித குற்றச்சாட்டுக்களும் இல்லாத நிலையில் நான் தன்னிச்சையாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன் என்பது உங்களுக்குத் தெரியும் என அவர் சவுதி மன்னருக்கான டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டார்.

எனது உடல்நிலை மிகவும் மோச மடைந்துள்ளது,இதன் காரணமாக நான் மரணிக்கலாம் என அவர் தெரிவித்தார்.

எனக்கு எந்தவித மருத்துவ உதவிகளோ எனது கடிதங்களுக்கான பதில்களோ கிடைக்கவில்லை என டுவிட்டரில் குறிப்பிட்ட இளவரசி, எந்தக் காரணமும் இல்லாமல் என்னை எனது மகள்களுடன் கடத்தி சிறையில் தள்ளியுள்ளனர் என மேலும் குறிப்பிட்டார். (இ)

# கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டுபிடிப்பதில் சீனா,அமெரிக்கா,இந்தியா இடையே போட்டி

(ஜெனிவா)

கொரோனா வைரஸின் பரவலைத்தடுத்து நிறுத்துவதற்கு தடுப்பூசியைக் கண்டுபிடித்து, உலக சந்தைக்கு முதலில் கொண்டு வந்து உயிர்ப்பலியை நிறுத்தப்போவது யார்? என்ற போட்டி இப்போது சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

நினைத்துப்பார்க்க முடியா தளவுக்கு கொரோனா வைரஸ் தொற்றுநோய் வெறியாட்டம் போட்டு வருகிறது.

சீனாவின் வுஹான் நகரில் உருவாகி, 4 மாதங்களில் உலகமெங்கும் 20 இலட்சம் பேருக்கு மேல் தாக்கி, ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்களின் உயிர்களை உலகளவில் பலி வாங்கியும் இந்தக் கொலைகார வைரஸின் கோரப்பசி அடங்கவில்லை.

இந்நிலையில், எப்படியாவது இந்தக் கொரோனா வைரஸுக்கு முடிவு கட்டிவிட வேண்டும் என்று அறிவியல் உலகம், கங்கணம் கட்டிக்கொண்டு, ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறது.

ஆனால் கொரோனா வைரஸுக்கு தடுப்பூசியைக் கண்டுபிடித்து பல கட்ட பரிசோதனைகளை நடத்தி உரிய அனுமதிகளையும் வாங்கி உலக சந்தைக்கு கொண்டுவருவது என்பது கொந்தளிக்கும் கடலில் மூழ்கி முத்தெடுப்பதுபோன்று சவால் நிறைந்ததாக இருப்பதாக அறிவியல் உலகம் சொல்கிறது. ஆனாலும் யாரும் அதற்கான முயற்சியிலிருந்து பின்வாங்கியதாகத் தகவல்கள் இல்லை.

அதுமட்டுமல்ல, கொரோனா வைரஸின் பரவலைத் தடுத்து நிறுத்துவதற்கு தடுப்பூசியைக் கண்டுபிடித்து அதை உலக சந்தைக்கு முதலில் கொண்டு வந்து வரப்போவது யார்? என்ற போட்டியும் நிலவுகிறது.

இந்த கொடிய கொரோனா வைரஸ் எங்கு தோன்றியதோ, அந்த சீனா களத்தில் முதலில் நிற்கிறது.

இந்த நாட்டின் கேன்சினோ பயாலஜிக்ஸ் நிறுவனம், தடுப்பூசியை உருவாக்கி இரண்டாவது கட்ட பரிசோதனையில் இறங்கியுள்ளது. இதை சீன அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகம் உறுதி செய்தது.

இந்த நிறுவனம் அடுத்த சில நாட்களில் 500 பேருக்கு தனது தடுப்பூசியை செலுத்தி பரிசோதிக்கத் தயாராக யிருப்பதாக கடந்த வாரம் அறிக்கை வெளியிட்டது. அதன்படி, 273 தன்னார்வலர்களுக்கு தடுப்பூசியை செலுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

அமெரிக்காவில் தேசிய சுகாதார நிறுவனமும், மாடர்னா நிறுவனமும் கிட்டத்தட்ட சீனாவின் நிலையில் தான் இருப்பதாக அமெரிக்காவிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் இவர்கள் ஒருவருக்கு தடுப்பூசியை செலுத்தி பரிசோதித்திருக்கிறார்கள். அந்த நபர், அடுத்து இரண்டாவது கட்டப் பரிசோதனைக்கு கடந்த செவ்வாய்க் கிழமையன்று சியாட்டில் கிளினிக் சென்றதாக தெரிய வந்தது.

அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனத்தின் வைத்தியர் அந்தோணிபாசி இதுபற்றி கூறும்போது, "இதுவரை பரிசோதனை நன்றாகச் செல்கிறது. எந்த ஆபத்தான அம்சமும் இல்லை. அடுத்து பெரியளவில் அதிக பேருக்கு தடுப்பூசியை செலுத்திப்பார்க்கிற சோதனையானது, ஜூன் மாதம் நடைபெறும்" என்கிறார்.

அமெரிக்காவின் இனோவியா நிறுவனத்தார், தாங்கள் உருவாக்கிய தடுப்பூசியின் முதற்கட்ட சோதனையை கடந்த வாரம் நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நிறுவனம், தனது சோதனையை சீனாவுக்கு விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

அமெரிக்காவும் சரி, சீனாவும் சரி, ஆரம்பகட்ட சோதனையைப் பொறுத்தமட்டில் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்துகின்றன.

இரு நாடுகளிலுள்ள ஆராய்ச்சியாளர் களுமே வெவ் வேறு வகையில், வெவ்வேறு அளவில் தடுப்பூசி மருந்தை செலுத்தி சோதிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆனால் தடுப்பூசி பரிசோதனையில் இரண்டாவது கட்டம் தான் மிக முக்கியமானது, பரபரப்பானது, பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதும்கூட. ஏராளமானோருக்கு தடுப்பூசியை செலுத்தி சோதிக்கிற மிக முக்கியமான கட்டமாக இது அமைந்துள்ளது.

இதற்கு மத்தியில், மருந்துலகின் ஜாம்பவான்கள் என்று உலகளவில் சொல்லப்படுகிற பிரான்ஸின் சனோபி நிறுவனமும், இங்கிலாந்தின் கிளாஸ்கோஸ்மித்கிளைன் நிறுவனமும் கொரோனா தடுப்பூசி கண்டுபிடிப்பதில் கரம் கோர்த்திருக்கின்றன.

இந்நிலையில் இந்தியாவும் கொரோனாவுக்கு தடுப்பூசி கட்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஒன்றல்ல, இரண்டல்ல, 6 இந்திய நிறுவனங்கள் கொரோனா தடுப்பூசி கண்டுபிடிக்கும் உலகப் போட்டியில் குதித்திருக்கின்றன.

சுமார் 70 தடுப்பூசிகள் இந்தியாவில் இதுவரை உருவாக்கப்பட்டிருக்கின்றன.இவற்றில் 3 தடுப்பூசிகள் மனிதர்களுக்கு செலுத்திப்பார்க்கிற அளவுக்கு தயார் நிலையில் இருக்கின்றன.

அதேவேளை அடுத்த ஆண்டுக்கு முன்னதாக பொதுப் பயன்பாட்டுக்கு இந்தத்தடுப்பூசி வருவதற்கான வாய்ப்பு இல்லை என்றும் தெரியவருகிறது. (இ)

# 24 மணி நேரத்தில் 23 பேர் பலி இந்தியாவில் கொரோனாவால் உயிரிழப்பு 437 ஆக உயர்வு



(டெல்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 387 ஆக உயர்ந்தது. பலி எண்ணிக்கை 437 ஆக அதிகரித்தது.

இதேவேளை நேற்றுக் காலை 8 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 23 பேர் மரணம் கொரோனாவால் உயிரிழந்தனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணமுள்ளது.

சமூகத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் கொரோனாவின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்றுக்காலை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 387 ஆக உயர்ந்தது.

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 1007 பேருக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டது. 23 பேர் மரணமடைந்தனர். இதன் மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 437 ஆக உயர்ந்தது. இதுவரை 1749 பேர் குணமடைந்தனர்.

மகாராஷ்டிர மாநிலத்தில் அதிகளவாக 3,205 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. 194 பேர் உயிரிழந்தனர். தலைநகர் டில்லியில் 1640 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது. 38 பேர் இதுவரை உயிரிழந்தனர்.

தமிழகத்தில் 1267 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் உயிரிழப்பு 15 ஆக அதிகரித்தது என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும் பொலிஸார் 23 பேருக்கு கொரோனா

(மும்பை)

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் பணியில் இருந்த பொலிஸார் 23 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் இந்தியாவிலும் வேகமாகப் பரவி வருகிறது. நாடு முழுவதும் இதுவரை 13 ஆயிரத்து 387 பேருக்குக் கொரோனா வைரஸ் பரவியது.

வைரஸ் பரவியவர்களில் ஆயிரத்து 515 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்தனர். ஆனாலும் இந்தக் கொடிய வைரஸுக்கு நாடு முழுவதும் இதுவரை 440 பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

நாட்டிலேயே அதிகபட்சமாக மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும் 3 ஆயிரத்து 202 பேருக்குக் கொரோனா வைரஸ் பரவியது. மேலும், அங்கு வைரஸ் பரவியவர்களில் 300 பேர் சிகிச்சைக்குப்பின் குணமடைந்தனர். ஆனாலும் அம்மாநிலத்தில் கொரோனாவுக்கு இதுவரை 194 பேர் பலியானர்.

இதற்கிடையில் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மே 3ஆம் திகதி வரை நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இந்த ஊரடங்கை உரிய முறையில் நடைமுறைப்படுத்தும் விதமாக நாடு முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வரும் பொலிஸாருக்கு அவ்வப்போது இடையூறு ஏற்படுத்தும் விதமாக மக்கள் ஊரடங்கு உத்தரவைக் கடைப்பிடிக்காமல் மீறி வருகின்றனர். இவ்வாறு உத்தரவை மீறும் மக்களுக்கு பொலிஸார் தகுந்த தண்டனை வழங்கி வருகின்றனர்.

மேலும், கொரோனா வைரஸ் பரவியவர்களைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டு வரும் மருத்துவத்துறையினருக்கும் பொலிஸார் பாதுகாப்பு உதவிகளை செய்து வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளின் போது கொரோனா நோயாளிகளிடமிருந்து மருத்துவ ஊழியர்களுக்கும், பொலிஸாருக்கும் கொரோனா பரவும் அச்சுறுத்தல் நிலவிவருகிறது.

இந்நிலையில் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஊரடங்கு காரணமாக சட்டம் ஒழுங்குப் பணியை மேற்கொண்டுவரும் பொலிஸார் 23 பேருக்குக் கொரோனா வைரஸ் பரவியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. வைரஸ் பரவியவர்களில் 7 அதிகாரிகள் மற்றும் 16 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளடங்குகின்றனர்.

இதையடுத்து, வைரஸ் பரவிய 23 பொலிஸாரும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

# கொரோனாவால் விரைந்து எதிர்நோக்கும் உணவுப்பற்றாக்குறையிலிருந்து விடுபட...



பேராசிரியர். கு. மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாயபீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

சித்திரைத் புத்தாண்டு அமைதியாக அமர்க்களமில்லாமல் வெடியோசை எதுவுமின்றி பிறந்திருக்கின்றது. நலமாக அனைவரும் மனையதில் மகிழ்ச்சியாக குதூகலித்திருக்க பிறந்திருக்கின்றது. உறவுகளுக்கிடையே அதிலும் இல்லங்களில் கூட சமூக இடைவெளியை (Social dis tancing) அறிமுகப்படுத்தி பிறந்திருக்கின்றது. அமைதிப்பூங்காவாக இருக்க வேண்டிய பூமி ஆணவம் கொண்டதால் நுண்ணிய கிருமி அனைவரையும் அனைத்தையும் அமைதியாக்கியிருக்கின்றது. எந்தவித அலட்டல்களுமில்லாமல் ஆரவாரமுமின்றி புத்தாண்டை இபபடியும் வீட்டிலிருந்து கொண்டாடலாம் என எங்கிருந்தோ வந்த கொரோனா வைரசு சொல்லாமல் சொல்லியிருக்கின்றது. தீமையிலும் இவ்வாறான அதிசயங்களும் நடக்கின்றன என்பதனை இப்போது உணரவைத்திருக்கின்றது.

எமது நாட்டில் ஊரடங்கியதால் கொரோனா என்னும் கொடிய வைரசுவின் பரவல் ஓரளவிற்று வெற்றிகரமாக கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கின்றது. இருப்பினும் கொரோனாவின் தாக்கமும் மேற்கத்தேய நாடுகளில் இன்னும் அதன் ஆளுமையும் குறைந்தபாடில்லை. அவ்வப்போது குறைவதுமாதிரியும் மீண்டும் தலை தூக்குவதுமான நிலையில் நாம் தற்போது இருக்கின்றோம் என்பதனை புரிந்து கொள்ளுங்கள். அரசாங்கத்தினது அறிவுறுத்தல் களையும் மருத்துவத்துறையின் ஆலோசனைகளையும் அவசியம் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இது ஏனைய காலங்களைப் போன்ற அவசரநிலையல்ல அதனையும் தாண்டி அனைவருக்கும் ஆபத்தான விடயமாக உயிர்கொல்லும் நிலைக்கு இட்டுச் செல்லும் நிலைமையாகும். விளையாட்டாகவும் வீரம் பேசுவதற்கும் நையாண்டி செய்வதற்குமான காலம் அல்ல. பொறுமையாக சிந்தித்து செயலாற்றும் காலமாகும். ஒருவர் செய்யும் தவறு பலஉயிர்களைக் காவுகொள்ளும் என்பதனை இங்கு நடந்த நிகழ்வுகளிலேயே அனுபவபூர்வமாக கண்டிருக்கின்றோம். அதிலும் தவறு செய்கின்றோம் என்று தெரியாமலேயே பல தொற்றுதல்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த வகையில் சுயதனிமைப்படுத்தல், குடும்பத்தைத் தனிமைப்படுத்தல், கிராமத்தை தனிமைப்படுத்தல் இன்னும் மாவட்டத்தை தனிமைப்படுத்தல் என்பது நாமாக நமக்கு இட்ட கட்டளையாக கொள்ள வேண்டுமே தவிர இதனை வலியுறுத்தி நிர்ப்பந்திப்பதாக எண்ண க்கூடாது. அனைவரும் ஒத்துழைத்து இந்த பேரிடரிலிருந்து விடுபட முயற்சி செய்வோம்.

நாம் தனிமைப்படுத்தல்களுக்கு உள்ளாகியிருந்தாலும் இனி வரப்போகின்ற காலம் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய காலமாகும். நோயின் தாக்கம் அவ்வப்போது அதிகரித்து பலர் அதில் அகப்பட்டு இன்னல் களுக்குள்ளாக நேரிடலாம். மருத்துவ உலகினதும் அரசாங்கத்தினதும் அறிவுறுத்தல்களை அவதானமாக கிரகித்து எம்மையும் எமது உறவுகளையும் நாம் தொற்றுக்குள்ளாகாதவாறு பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். குறிப்பாக வயதானவர்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு இலகுவில் இந்த நோய் தொற்றுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் என்பதனால் மிகக் கவனமாக நாம் செயற்படவேண்டும். அதிலும் எங்கிருந்தாலும் அவசியம் சமூக இடைவெளி பேணுதல், உப்புத்தண்ணீரால் அடிக்கடி கொப்பளித்தல், அடிக்கடி நீரருந் துதல், கைகளை சவர்கார நுரைகொண்டு கழுவுதல், சுடுதண்ணீர் அருந்துதல் இன்னும் நீராவிபிடித்தல் என்பன நாமாக கடைப்பிடிப்பது மிகவும் முக்கிய மானதாகும். எமது பாரம்பரியத்திலும் கலாச்சாரத்திலும் பலவிடயங்கள் இவ்வாறான நுண்ணங்கித் தொற்றினை தவிர்ப்பதற்காக நாம் கடைப்பிடிப்பதனை ஒரு கணம் அலசிப் பார்க்கலாம். நாம் ஒருவரது மரணவீட்டிற்கு சென்றுவிட்டு வரும்போது நாமும் தலைமுழுகி நாம் அணிந்த அனைத்து உடைக ளையும் களைந்து தோய்த்து விட்டே வீட்டினுள் செல்லுகின்றோம். இந்த சுத்தத்தை நாம் ஒவ்வொரு முறையும் அவசிய தேவைக்காக வெளிச்சென்று திரும்பும் போதும் கடைப்பிடித் தால் வீட்டிலுள்ளவர்களுக்கு தொற்று ஏற்படாமலும் அடிக்கடி வெளிச்செல்வதை குறைக்கவும் உதவும். தேனீக்களிலும் இந்த அதிசயத்தை காணலாம். இரை தேட வெளிச்செல்லும் தேனீக்கள் பூக்களிலிருந்து தேன்சுரப்பையும் மகரந்த மணிகளையும் சேகரித்து கொண்டு வந்து அதன் குடியிலுள்ள வேறு தேனீக்களுக்கு வழங்குமே தவிர எந்த காரணத்தைக்கொண்டும் உட்செல்லாது. உள்ளே சென்றால் குடிக்கும் ஏனைய இளந்தேனீக்களுக்கும் குறிப்பாக இராணித் தேனீக்கும் நோய்த்தொற்று ஆகிவிடும் என்பதால் தேனீக்கள் இவ்வாறு நடந்து கொள்கின்றன. தேனீக்கள் இவ்வாறு சுத்தம் பேணுவதை நாம் அவற்றிலிருந்து கற்றாவது எமது வீட்டிற்கு செல்லும் போது நாம் செய்ய வேண்டும். வெளியில் சென்று வருபவர் யாராயினும் கால் கழுவாது உள்வருவதில்லை. இதனை விட பிரசவம் நடந்துள்ள வீட்டில் தாயையும் மகவையும் தனியான அறையில் சுத்தமான இடத்தில் தனிமைப்படுத்தி வைத்திருப்பார்கள். எவரும் இலகுவில் இவர்களுடன் உறவாட அனுமதிப்பதில்லை. பிஞ்சுக்குழந்தைக்கு தொற்று ஏற்பட்டுவிடும் என்பதற்கான முன்னேற்பாடுதானே. மேலும் அறையின் வாயிலில் வேப்பம் கொத்தினை அனைவரது கண்ணிலும் படும்படி வைத்திருப்பார்கள். மஞ்சள் கரைத்து தெளிப்பது குறிப்பாக பொங்கலின் போது போடப்படும் கோலத்திலும் பொங்கல் பானை வைத்திருப்பதற்காக வரையப்படும் நாற்பக்க வரைபிலும் மஞ்சள் கலந்து போடுவார்கள் இதனால் எறும்பு கூட அந்த இடத்திற்குள் வராது. சுத்தமாக வாழ்ந்த எமது கலாச்சாரத்து வாழ்க்கைக்கு நாம் திரும்ப வேண்டும் என்பதனை தற்போதுள்ள நிலைமைகள் எடுத்துக்கூறுகின்றன.

நாம் வாழும் தற்போதய காலம் உணவுக்கான பிரச்சனைகள் எழப்போகின்ற காலமாகும். உணவிருந்தால் எந்தவகையிலாவது அதனைப் பெற்று மக்களுக்குக் கொடுக்க முடியும். ஆனால் உணவே இல்லையென்றால் பிரச்சனை பூதாகாரமாகிவிடும். வெளிநாட்டிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதியாகாது என்பதிலிருந்து எமக்கான உணவை நாமே உற்பத்தி செய்தல் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள், பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள், அன்றாடம் வேலை செய்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற குடும்பங்கள் இன்னும் அங்கவீனர்களாகி தமது பங்களிப்பை செய்ய முடியாத மக்கள் என பலர் அந்த ஊரடங்கலுடன் தமது வாழ்க்கையை தக்கவைத்துக் கொண்டிருக்கின்றார்கள். பலர் உணவுப்பஞ்சத்தில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். இது தொடரவும் மீண்டும் உணவுப் பிரச்சனை பாரிய பிரச்சனையாக உருவெடுக்கவும் விடக் கூடாது. இதற்காக சரியாக சிந்தித்து செயலாற்றவேண்டிய தருணம் இது.

உணவுற்பத்தியை யார் செய்வது என்னும் கேள்விக்கு உடனடியாக விவசாயிகள் தானே செய்கின்றார்கள் அதனால் நாம் எதைப்பற்றியும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்பதாக பலர் நினைத்துக் கொள்கின்றார்கள். ஆனால் தற்போது விவசாயப் பெருமக்களும் பாதிக்கப்பட் டிருக்கின்றார்கள். கோழி வளர்ப்போர் முட்டையை விற்பதில் சந்தைப் படுத்துவதில் திண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள். கால்நடை வளர்ப்போர் தீனிக்காகவும், உற்பத்தியாகும் பாலை விற்பதற்காகவும் அலை ந்து திரிய வேண்டியதாயிருக்கின்றது. வயலில் விளைந்தகாய்கறிகளை நல்ல விலைக்கு விற்க முடியாமல் பல விவசாய பெரு மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கடலுக்கு அனுமதியோடு சென்று மீன் பிடித்தவர்கள் கிடைத்த மீனை விற்க முடியாமல் தெருத் தெருவாக அலைந்து கொண்டிருக்கின்றார் கள். உணவுற்பத்தியில் ஈடுபடும் இவ்வகை மக்கள் துன்பப்பட்டால் நக்ஷ்டப்பட்டால் நாம் அனை வரும் பின்னர் அவதிப்பட வேண்டி வரும் என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். காசு இருந்தாலும் உண்ணுவதற்கு உணவு இருக்காது மாறாக நாம் அனைவரும் இந்த நிலைமையைப் புரிந்து கொண்டு ஒற்றுமையாக உழைத்தால் எமக்கான உணவை நாமே உற்பத்தி செய்து கொள்ளலாம்.

2014ம் ஆண்டினை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய தாபனம் (Food and Agriculture organization) உலக குடும்ப வேளாண்மைக்கான ஆண்டாக பிரகடனப்படுத்தி குடும்ப விவசாயத்தை முக்கியத்துவப்படுத்துவதில் வெற்றி கண்ட தனால் 2019 இலிருந்து 2028 வரையான பத்தாண்டு காலப்பகுதியை ஒரு தசாப்தத்திற்கான குடும்ப விவசாயம் என பிரகடனப்படுத்தியிருக்கின்றார்கள். இது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட பிரகடனப்படுத்தல் என்றாலும் ஐக்கிய நாடுகள் தாபனம் பிரகடனப்படுத்திய 2030 ஆண்டினை நோக்கிய பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைமையப்படுத்திய தானதாக அமைந்ததுடன் அதற்காக முழுமையான முன்னொத்திகையா எனவும் எண்ணத் தோன்றுகின்றது. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் இந்த குடும்ப விவசாயம் பற்றிய அறிவிப்பு காலத்தின் தேவையை முழுமையாக உணர்ந்த சாணக்கியமான எதிர்வுகூறலின் வெளிப்பாடு என்றால் மிகையாகாது.

குடும்ப விவசாயத்தில் முழுக குடும்பமும் தமக்குத் தேவையான பயிர்களை தமது வீட்டில் அதிலுள்ள இடத்தில் இன்னும் காணியில் வளர்த்தல் ஆகும். வீட்டுத்தோட்டத்தின் வெற்றியிலேயே குடும்ப விவசாயம் தங்கியிருக்கின்றது. வீடுகளிலுள்ள அனைவரும் தமது பங்குக்கு வீட்டுத்தோட்டத்தில் பயிர்களை வளர்ப்பதற்கு உதவிசெய்யலாம். குறிப்பாக ஒவ்வொரு வீட்டிலும் இருக்கின்ற இடவசதியைப் பொறுத்து சராசரியாக ஐவர் கொண்ட குடும்பத்திற்கு 4 தென்னை மரங்கள். இரண்டு மாமரங்களில் விலாட்டு ஒன்றும் கறுத்த கொழும்பான் அல்லது வேறு ஏதாவதொரு வகையும், பலா, பெரு நெல்லி மற்றும் சிறுநெல்லி என்பனவற்றில் ஒவ்வொன்றும், அன்னமுன்னா இரண்டு, கொய்யா ஒன்று, மாதுளை ஒன்றும், கருவேப்பிலை மற்றும் தேசி ஒவ்வொனறுமாக இன்னும் இடவசதியிருந்தால் புளியமரம், விளாத்திமற்றும் ஈரப்பலா என்பனவற்றை நடுகை செய்யலாம். இவற்றுடன் சேர்த்து மண்புழு வளர்ப்பதற்காக அதன் இலைக்காகவும் இன்னும் இதனது இலை விரைந்து உக்கும் என்பதாலும் இரண்டு தேக்கமரத்தினையும் இடவசதியைப் பொறுத்து நடலாம். நீர்வசதி கிடைப்பதைப் பொறுத்து வீட்டின் முன்பக்கத்தில் வாழையினங்களில் கதலி மற்றும் இதரையையும் பின்பக்கத்திலென்றால் கறிவாழை மற்றும் கப்பலையும் நடுகை செய்யலாம்.,வற்றுடன் வேலியில் அகத்தி, முருங்கை மரங்களையும், ஆடாதோடை, பிரண்டை, சிறுகுறிஞ்சா, போன்ற மூலிகைச் செடிகளையும் நடுகை செய்யலாம்.

நகரப்பகுதியில் உயிர்வேலிகளனைத்தும் சிமெந்து சுவர்களாக அதிலும் வெளியிலிருந்து உட்பக்கம் தெரியக்கூடாது என்பதற்காக 8 - 10 அடிவரை சுவரை உயர்த்தி காற்றும் புகாதவாறு கட்டியெழுப்பியிருக்கின்றார்கள். உலகத்திலேயே சுவர்களை உயரக் கட்டியெழுப்பி அதற்குள்ளே இடர்பட்டு வாழும் மக்கள் கூட்டம் நாமாகத்தான் இருக்கும். சீமெந்து சுவர்களில் நிலைக்குத்தான தோட்டத்தை (Vertical Gardening) உருவாக்குவதற்கு நாம் முயற்சி செய்யலாம். கொடிவகைகளை வீட்டிற்குள் சுவரிலிருந்து 1 - 2 அடிகள் உட்பக்கமாக விதையிட்டு வளரச் செய்து அவை வளரும் போது அதிலொரு கயிறு கட்டி கயிற்றின் மறுபக்கத்தில் கல்லொன்றை கட்டி சுவரில் மாட்டி மேல் நோக்கி வளரச்செய்யலாம். அனைத்து ஏறிவகைகளையும் கொடிவகை களையும் இவ்வாறு மேல்நோக்கி வளரச் செய்யலாம். இவ்வாறு செய்வதற்கு அதிகமான இடவசதி தேவையில்லை மாறாக சுவரினை இவ்வாறான தாவரங்களை வளர்ப்பதற்கான பசுமைச் சுவர்களாக மாற்றிவிடலாம். உயிர் வேலிகளின் பெறுமதி இதில் கிடைக்காதென்றாலும் சுவர்களை பசுமைச்சுவர்களாகவாவது நாம் மாற்றிய மைக்கலாம். வீட்டிலுள்ள மரங்களில் ஏறிகளை படர விடலாம். அதிகம் பயன்படுத்தப்படாத தாவரங்கள் (Underutilized plants) அதிகம் பராமரிப்பு தேவையற்ற தாவரங்களை நடுகை செய்யலாம்.

வீட்டுத்தோட்டத்தில்வளர்க்கக் கூடிய தாவர வகைகளாக குறிப்பாக இலைக்கறி வகைகளான சிறுகீரை, வல்லாரை, பொன்னாங்காணி,பொதினா, அகத்தி, முருங்கை இவற்றுடன் இன்னும் பல வகை தாவரங்களையும் திட்டமிட்டு நடுகை செய்யலாம். இன்னும் பழமரங்களையும் இவற்றோடு தெரிவுசெய்து நடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். இவற்றோடு சேர்த்து சிறிய அளவிலாயினும் மரக்கறி பயிர்களை வளர்க்கலாம். குறிப்பாக கத்தரி, மிளகாய், தக்காளி, பூசணி, நீற்றுப்பூசணி, தார்ப்பூசணி, டுபாய் பூசணி, பாகல், புடோல், துபாய் பூசணி, பயற்றை, பீன்ஸ்சு என்பனவற்றை தெரிவுசெய்து நடலாம். சிறுகக் கட்டி பெருகவாழ் என்று கூறியதன் அர்த்தத்தை வைரஸின் தாக்கத்தின் மூலமாக அவரவர் வீடுகளில் இருந்து கொண்டு அனைவரையும் அதனைப் பற்றி சிந்திப்பதற்கு வழிகாட்டியிருக்கின்றது. மேலும் இவ்வாறான தாவரங்களை தெரிவு செய்து நடும்போது அவற்றுக்குத் தேவையான பசளையை வீட்டிலேயே உற்பத்தியாகும் சேதன கழிவுகளை மீள்சுழற்சி செய்வதன் மூலம் சிறப்பான முறையில் பெற்றுக் கொள்ளலாம். சிறியளவிலான மண்புழு வளர்ப்பு தொழிநுட்பம் இதற்கு நல்லதொரு பதிலாக அமையும். அதிகளவு நேரத்தையும் பணத்தையும் செலவழிக்காது செய்யக் கூடிய மண்புழு வளர்ப்பினை இவ்வாறான நேரத்தில் செய்து பார்ப்பது மிகவும் நல்லது. சிறிய கொள்கலனினுள் சமையலறைக் கழிவுகள் உட்பட வீட்டுநி லத்தை பெருக்கிய இலைக்கழிவுகள் மற்றும் வாழைத்தண்டுகள் இலைகள் கடதாசி மட்டைகள் அனைத்தையும் சிறு துண்டுகளாக்கி இட்டு அவற்றினுள் சாண த்தைக் கரைத்து இடுதல் வேண்டும். மாட்டுச்சாணம் மண்புழுக்களுக்கு உகந்த பொருளாகும். இதனினுள் மண்புழுக்களை இட்டால் அது தன்பாட்டுக்கு உண்டு மண்புழு உரத்தை வெளிவிடும். இதனை தாவரத்தின் அடிப்பகுதியிலும் நாம் இன்னும் விருப்பப்பட்டால் கொள்கலனின் அடிப்பகுதியில் துளையிட்டு அதனின் அடிப்பகுதியில் பிளாஸ்ரிக் போத்தலின் மூடியுடனான மேற்பகுதியை பொருத்திவிட்டால் மூடியைத் திறக்கும் போது அதனினூடாக வெளிவரும் கரைசலை வடித்து மண்புழு திரவமாகவும் தாவரங்களுக்கு விசிறமுடியும்.

வீட்டுத் தோட்டத்தை அமைப்பதற்கு அவரவர் வீடுகளில்

9 ஆம் பக்கம் பார்க்க

# ஊரடங்கு உத்தரவைத் தளர்த்தக் கோரி துப்பாக்கியுடன் திரண்ட அமெரிக்க மக்கள்




(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஊரடங்கு உத்தரவைத் தளர்த்தக் கோரி நேற்று முன்தினம் நூற்றுக் கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு போராட்டம் நடத்தினர்.

கொரோனா வைரஸால் உலகிலேயே மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது

அமெரிக்காவில் அளவுக்கு மீறி சமூகப் பரவல் அதிகரித்ததே இவ்வளவு பெரிய பாதிப்புக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

மேலும் அங்கு வைரஸ் பரவாமல் தடுக்க நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பெட்டது. இருந்தும் வைரஸால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தினமும் ஏறுமுகத்திலேயே உள்ளது.

அதேபோன்று உலகின் மிகப் பெரும் பொருளாதாரம் கொண்ட நாடாகவும் அமெரிக்கா உள்ளது.

கொரோனா வைரஸால் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவால் அந்நாட்டின் பொருளாதாரமும் மிகப் பெரும் பாதிப்பை எதிர்கொண்டது.

கடந்த 50 ஆண்டுகளில் இல்லாதளவு அங்கு வேலை வாய்ப்பு குறைந்துள்ளது. அதாவது சுமார் 22 மில்லியன் மக்கள் வேலையில்லாமல் உள்ளதாகக் கூறப்படுகிறது. அந்நாட்டின் பங்குச் சந்தைகளும் கடும் வீழ்ச்சியடைந்துள்ளன.

அமெரிக்காவில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு ஒரு மாதமான நிலையில், ஊரடங்கு உத்தரவைத் தளர்த்தி தங்களை வேலைக்குச் செல்ல அனுமதிக்குமாறு பல நூறு தொழிலாளர்கள் நேற்று முன்தினம் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தினர்.

அமெரிக்க மாகாணமான கென்டக்கியில் கூடிய இளைஞர்கள், ' நாங்கள் வேலை செய்ய விரும்புகின்றோம், இதுதான் எங்கள் பயத்தின் உண்மை நிலை' என கோஷமிட்டுக் கொண்டே அமெரிக்கக் கொடிகள், துப்பாக்கிகள் ஏந்தியபடி வீதிகளில் ஊர்வலமாகச் சென்றனர். மேலும்' அமெரிக்காவைக் கடவுள் ஆசீர்வதிப்பார்', 'எங்களை விடுவியுங்கள்" என்ற கோஷங்களும் கென்டக்கி வீதிகளில் எதிரொலித்தன. இதே போல மெக்ஸிகன், ஒஹியோ, மின்னெசோடா, வடக்குக் கரோலினா, உடாத் ஆகிய மாகாணங்களிலும் மக்கள் போராட்டம் நடத்தினர். பிறகு அனைவரும் பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மெக்ஸிகன் ஆளுநர் கிரேசென் விட்மெர், "இந்த மாகாணத்தின் சிறு பகுதி மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தினர். வீட்டில் அடைத்துவைக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்குப் பயம் கலந்த பதற்றம் அதிகரித்தது. அவர்கள் வேலைக்குச் சென்றால்தான் அடுத்த மாதம் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும். அதனால்தான் போராட்டம் நடத்தினர். இதில் சோகமான விடயம் என்னவென்றால் மக்கள் வெளியில் வந்து ஒன்றுகூடி போராட்டம் நடத்தினர். இதனால் கொரோனா வைரஸின் தொற்று அதிகரிக்கும் அபாயம் உள்ளது" எனத் தெரிவித்தார்.



இதற்கிடையில் அமெரிக்காவில் ஊரடங்கு உத்தரவு படிப்படியாகத் தளர்த்தப்படும் என ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ஆளுநர்களுடனான ஆலோசனைக் கூட்டத்துக்குப் பிறகு ட்ரம்ப இதனைத் தெரிவித்தார்.

இதன் மூலம் தங்கள் மாகாணங்களில் நடைமுறையிலுள்ள முடக்க நிலையை மத்திய அரசின் உதவியோடு ஆளுநர்களே படிப்படியாகத் தளர்த்திக் கொள்ளலாம். மேலும் இந்த மாத இறுதிக்குள் பாதிப்பு குறைவாகவுள்ள மாகாணங்களில் நிச்சயம் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும் என்றும் ட்ரம்ப் உறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




## 8 ஆம் பக்கத் தொடர்ச்சி

உள்ள மாணவச் செல்வங்களை அழைத்து அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் அனைத்து நடவடிக்கைகளையும் செயற்படுத்தலாம். ஒரு பொழுது போக்காகவும் அதேநேரத்தில் அவர்களினுடைய புத்தாக்கத்திற்கு தீனிபோடுவதாகவும் நிச்சயம் இது அமையும். பல்வகைத் தாவரங்களை வளர்க்கும் போது அவை முளைத்து, வளர்ந்து பூக்களை உருவாக்கி பின் காய்கள் வந்து அறுவடை செய்யும் போது நடை பெறும்நிகழ்வுகளை கண்ணால் காண்பதற்கான வாய்ப்பினை நாம் ஏற்படுத்திக் கொடுக்கின்றோம். மாணவர்களின் திட்டமிடலுக்கும் செயற்படுத்தலுக்கும், அதை ஒழுங்குபடுத்தும் முறைக்கும் இது அடிப்படையாக இருப்பதுடன் சுயகற்றலுக்கும் அதிகம் வழிசமைக்கும். தொடா் ந்து படிப்பதைத் தவிர்த்து மாணவர்களுக்கான ஒரு பொழுது போக்காக இதனை மாற்றிக் கொள்ளலாம். நடுகை செய்தல் தாவரங்களுக்கு நீரூற்று தல்,மண் அணைத்தல்,இன்னும் ஏனைய சிறு தொழில்களுக்கும் மாணவர்களின் சுயசிந்தனைக்கு இடந்தரலாம். இதன் மூலம் ஒவ்வொரு வீட்டுக்கும் தேவையான குறிப்பிட்ட அளவு உணவுப் பொருட்களை இலகுவாக உற்பத்தி செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்த விடயத்தில் வீட்டில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் ஒன்றாக சேர்த்து குறிப்பாக வயது வந்தவர்களையும் இந்த வீட்டுத்தோட்ட செயல்முறைகளுக்குள் இணைத்துக்கொள்ளலாம். தொடர்ச்சியாக தனிமையில் இருக்கும் பெரியவர்களை இவ்வாறான சிறு செயற்பாடுகளுக்கு அழைப்பது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். மாறாக வீட்டில் பசுமையான சூழல் உருவாவதை அனைவரும் உணரமுடியும் அத்துடன் வளிமண்டல வெப்பநிலை அனைவரையும் வாட்டியெடுக்க ஆரம்பித்திருக்கும் இந்நாட்களில் குளிர்மையான சூழலை நீங்களும் உருவாக்கிக் கொள்ளலாம். தாவரங்கள் வளர்ந்து பூக்கும் போதும் காய்கள் வந்து கனியாகும் போதும் ஏற்படும் மாற்றங்கள் இதனை தினமும் அவதானிக்கும் மாணவச்செல்வங்களிலும் மனதில் மாற்றங்களை உண்டுபண்ணும். இன்னும் அவர்களுக்கு வகை வகையான தாவரங்களை வளர்ப்பதற்கு விருப்பப்படுவார்கள்.

வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தியாகும் பொருட்களை தமக்கு உணவாக்கிக் கொள்ளும் அதே நேரத்தில் அதிகமாக விளைந்த பொருட்களை மிகவும் அண்மையில் உள்ள இடத்தில் விற்பனைக்கு விடலாம். இதற்கான கட்டமைப்பினை கிராம அலுவலர்களுடன் கலந்துரையாடி உருவாக்கிக் கொள்ளலாம். ஓரிடத்திலான சந்தையாக இல்லாமல் பரந்து பட்டதாக விற்பனை அங்காடிகளை உருவாக்கினால் மக்கள் நெருக்குவாரப்படாமல் பொருட்களைக் கொள்வனவு செய்ய ஏதுவாக இருக்கும். மாறாக தற்போது ஒவ்வொரு வீட்டுக்கும் ஆகக் குறைந்தது ஒரு கைப்பேசியாவது இருப்பதனால் அங்காடிகளின் தொலைபேசிக்கு அழைத்து தேவையானவற்றை பெற்றுக் கொள்ளலாம். இதுவொன்றும் புதுமையான விடயங்கள் அல்ல வேறு நாடுகளில் இலகுவில் நடைபெறும் நிகழ்வுகள் இவை. எமது பிரதேசத்திற்கு புதியவையாக இருந்தாலும் இதனாலான அனுகூலம் அதிகம். மரக்கறி விற்பவர், மீன் விற்பவர், முட்டை விற்பவர், ஏனைய உணவுப் பொருட்களைவ விற்பவர்களை நெருக்கடியற்ற ஓரிடத்திற்கு வரவழைத்து மக்கள் தமக்கு தேவையான பொருட்களை வாங்கிக்கொள்ளலாம். ஊரடங்கு தளத்தப்பட்டவுடன் நெருக்கியடித்து பொருட்களை வாங்கிக் குவிப்பதும் மருத்துவ உலகம் கூறும் அறிவுரைகளை செவிமடுக்காது விட்டாலும் மீண்டும் நாம் தற்போது அனுபவிக்கும் இவ்விடருக்கும் எம்மை இட்டுச்செல்ல நேரிடலாம். மக்களாக பொறுப்புணா்ந்து செயற்படுவது மிகவும் சிறந்தது.

அந்தந்த பிரதேசத்தில் உள்ள குறிப்பிட்ட கிராமங்களில் விதைகள், நாற்றுக்கள் நடுகைப் பொருட்களை தேவைக்கேற்ப உற்பத்தி செய்து கொள்ளலாம். இவற்றுக்கும் மேலாக தொற்று இல்லாத கிராமங்களை விடுவித்து அந்தந்த பகுதியில் உள்ள மக்கள் சேர்ந்து உற்பத்தியை அதிகரிப்பதற்கு வழி செய்யலாம். அநேகமான மக்கள் அன்றாடம் வேலை செய்து தமது வாழ்க்கையை நடாத்துபவர்களாக இருக்கும் போது அவர்கள் வேலை செய்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தால் அதன் மூலம் பெறும் ஊதியத்தை வைத்து அவர்களது இல்லத்திலும் அனைவரும் உணவுண்டு மகிழ்ச்சியாக இருப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இவ்வருட சித்திரைப் புத்தாண்டு பலர்கூடிய கொண்டாட்டங்களற்றுதேவையற்ற செலவற்ற மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மகிழ்ச்சியாக அனைவரும் இணைந்திருக்கும் நிலையில் நடந்து முடிந்திரு க்கின்றது. இதே போல அனைவரும் பொறுமை காத்து தொற்று இல்லாத தேசத்தை உருவாக்குவதற்கு நாமும் பங்களிக்க வேண்டும்.

கிராமங்கள்தோறும் உற்பத்தியாகின்ற விளைபொருட்களிலிருந்து மதிப்பேற்றஞ்செய்து அவற்றை நீண்ட காலத்திற்கு பாதுகாப்பாக சேமிப்பதற்கும் இன்னும் அவற்றுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்வதும் நன்மைதரும். கிராம சக்தி என்னும் அந்தப் கருப்பொருளுக்கு அர்த்தம் கற்பிக்க கூடிய தான நிலமை உருவாகியிருக்கின்றது. விவசாய திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட தானிய மற்றும் சிறுதானிய பயிர்கள், மூலிகை தாவரங்கள் குறிப்பாக உணவில் சேர்க்கக் கூடிய மூலிகை தாவரங்களை இந்த வீட்டுத் தோட்டத்தினுள்ளே உள்வாங்கிக்கொள்ளலாம். இதன்மூலமாக எங்களது வீடுகளைச் சுற்றி பல்வகை தன்மையுள்ள தாவரங்களை வளர்க்கக் கூடியதாக இருப்பதுடன் அவற்றின் பயன்பாடுகள் அனைத்தையும் நாம் இலகுவில் பெறக்கூடியதாக இருக்கும். ஐக்கிய நாடுகள் தாபனத்தின் குடும்ப வேளாண்மையின் மகத்துவத்தை அனைவரும் உணரக்கூடியதான இந்த சிறந்த வாய்ப்பை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவற்றை ஒட்டு மொத்தமாக சிந்தித்து குடும்பத்தில் உள்ள அனை வரும் இணைந்து வினைத் திறனான ஒரு வீட்டுத் தோட்டத்தை உருவாக்குவதில் வெற்றிக் கொள்வோம்.

தற்போதய காலநிலை சிறுபோகத்துக்குரியதாக இருப்பதனாலும் விவசாயத் திணைக்களம் அதற்கு முன்கூட்டியே தயாரானதாக இருந்தமையும் எமக்கு சாதகமானதாக அமைந்திருக்கின்றதெனலாம். நெல்,சோளம், மற்றும் குரக்கன், உழுந்து, பயறு, கௌபீ. மற்றும் சிறுதானியங்களையும் பயிரிட ஊக்குவிக்கப்படுகின்றது. அரசாங்கத்தினால் 36 வகைப் பயிர்ச் செய்கைக்கு 4 சதவீத வட்டியில் 5 இலட்சம் ரூபாவரை விவசாயக் கடன்வழங்கப்படும்என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. மக்களை விவசாயச்செய்கையில் ஊக்குவித்து எதிர்வரும் உணவுப்பற்றாக் குறையை நாம் எதிர்கொள்ள தயாராவோம்.

கணணிப்பயன்பாட்டில் பரீட்சயமுள்ளோர்கள் உற்பத்தியாளனையும் நுகர்வேரையும் இணைக்கும் இலத்திரனியல் மென் கருவியை அனைவரும் பயன் படுத்தக் கூடியவாறு மாற்றியமைத்து அந்தந்தக் கிராமங்களில் செயற்படுத்தலாம். இன்னும் இதனை பெரியளவில் மாற்றியமைத்தால் வட பகுதி உற்பத்தியாளர்களையும் தென்பகுதி வர்த்தகர்களையும் இலகுவில் இணைத்திட முடியும். மீனவர்கள் தெருத்தெருவாக அலைந்து மீனை விற்பதற்குப் பதிலாக அவர்களின் தொலைபேசி எண்ணுக்கு செய்தியை அனுப்புவதன் மூலம் விரைந்து காலைநேரத்திலேயே மீன் பழுதுபடமுன்னர் விற்பதற்கு ஒழுங்கு செய்து கொடுக்கலாம். இவ்வாறான கட்டமைப்பு அனைத்து விளை பொருட்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டால் எமது பிரதேசம் தொற்றுக்கு முகங்கொடுக்காது ஒழுங்கான பாதுகாப்பான நிலைமைக்கூடாக நாம் அனைத்து இடர்களிலிருந்தும் வெற்றி பெற முடியும்.

நாம் எந்த இடரையும் எதிர்நோக்கக்கூடியளவிற்கு எம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டால் அவற்றிலிருந்து உயிரிழப்பின்றி அனைவரையும் காப்பாற்றிக் கொள்ள முடியும். முயற்சியுடையார் ,கழ்ச்சியடையார். ஒற்றுமையே எமது பலம் என்றும் பலம் என்பதனை உணர்ந்து மற்றையவர்களையும் மகிழ்வித்து உணவு உண்ணவைத்து நாமும் உண்ணப் பழகிக்கொள்ளல் ஆத்ம ரீதியிலான பலத்தையும் இப்பிறவிப் பயனையும் இன்னும் நம் சந்ததிக்கான புண்ணியத்தையும் தரும்.

## அரியாலையில் ஆராதனை: வவுனியாவில் தனிமைப்படுத்தல்

# 8 பேரிடம் இரண்டாவது தடவையாகவும் நேற்று இரத்த மாதிரிகள் பரிசோதனை

(வவுனியா)

யாழில் இடம்பெற்ற சுவிஸ் போதகரின் ஆராதனையில் கலந்து கொண்ட நிலையில் வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட 8 பேரின் இரத்த மாதிரிகள் இரண்டாவது தடவையாகவும் பெறப்பட்டு கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை வவுனியா பொதுச் சுகாதாரத் துறையினரால் குறித்த இரத்த மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கடந்த மாதம் 15 ஆம் திகதி அரியாலையில் இடம்பெற்ற சுவிஸ் மதபோதகரின் ஆராதனையில் கலந்து கொண்ட நிலையில் பலாலி தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த வவுனியா வைத்தியசாலை ஊழியருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் வவுனியா, காத்தான் கோட்டம் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவரது குடும்பம், யாழ்.தாவடியிலுள்ள கொரோனா தொற்றாளருடன் தொடர்பைப் பேணிய நிலையில் ஓமந்தை அரச வீட்டுத்திட்டப் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு குடும்பம், யாழ்.மத போதகரின் ஆராதனையில் கலந்து கொண்ட புளியங்குளம் முத்துமாரி நகர் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 6 குடும்பம் என்பவற்றில் குறித்த குடும்பங்களிலிருந்து ஆராதனையில் கலந்து கொண்ட மற்றும் நேரடித் தொடர்பிலிருந்த 8 பேரின் இரத்த மாதிரிகள் சுகாதாரத் துறையினரால் இரண்டாவது தடவையாக பெறப்பட்டு கொரோனா தொற்று உள்ளதா? என்ற பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இவர்களிடம் கடந்த கடந்த 8 ஆம் திகதியும் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன்போது நோய் தொற்றுக்கான எந்தவித அறிகுறிகளும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-299)

## இந்தியப்பிரஜை ஒருவர் நிலாவெளியில் கைது

(நிலாவெளி)

திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் கடவுச்சீட்டு மற்றும் விசா அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி நாட்டில் தங்கியிருந்த இந்தியப்பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நிலாவெளி - வேலூர் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளின் போதே இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இந்தியாவைச் சேர்ந்த 57 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதுடன், இவரிடம் கடவுச்சீட்டோ வீசா அனுமதிப்பத்திரமோ இல்லை என பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்தது. (இ)

## பாதுகாப்புச் செயலர் முல்லைக்கு விஜயம்



(முல்லைத்தீவு)

பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டார்.

விமானம் மூலம் கேப்பாப்புலவு இராணுவத் தலைமையகத்துக்கு வருகை தந்த அவர் முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமை அலுவலக வளாகத்தில் கட்டளைத் தளபதியின் தலைமையில் இடம் பெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

கொரோனா வைரஸ் நாடளாவிய ரீதியில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நிலைமைகள் தொடர்பில் ஆராயும் முகமாகவும் குறித்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்ற முப்படையினருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்கும் முகமாகவும் பாதுகாப்புச் செயலாளரின் விஜயம் இடம்பெற்றது. (இ-281)

# ஊரடங்கில் உதவிய கரங்கள்

நீர்வேலி திருமுருகன் மண்டப உரிமையாளர் கலாபூசணம் திருமுருகன் நடராசா சிவசுப்பிரமணியம் தமது நிதிப்பங்களிப்பில் தற்போதய சூழ்நிலையை கருத்திற் கொண்டு கர்ப்பவதிகள், சிறுபிள்ளைகள், முதியோர்கள் மற்றும் விசேட தேவையுடையோர்களுக்கு தேவையான முக்கிய பொருட்களை 06.04.2020 அன்று அன்பளிப்பு செய்தனர்.



சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தினால் "உறவுகளுக்காய் நாம்" என்னும் செயற்திட்டத்தின் கீழ் சங்கானை மாவடி வாழ் வெளிநாட்டு உறவுகள் மற்றும் மாவடி இளைஞர்களின் நிதிப் பங்களிப்புடன் ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் J/180, J/178, J/143 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 90 குடும்பங்களுக்கு மானிப்பாய் பொலிஸ்நிலைய அனுமதியுடன் அவர்கள் பிரதேசங்களுக்கு சென்று மாவடி இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்களினால் வழங்கி வைக்கப்பட்டன.



கொரோனா வைரஸ் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கினால் மக்கள் பெரும் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதால் அதன் பொருட்டு அச்செழு நாகதம்பிரான் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் அம்பிகை அடியார்களுக்கு ஆலய நிர்வாகத்தினால் உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.







ஒட்டுசுட்டான் மாற்றுத்திறனாளிகள் குடும்பங்கள் 25 பேருக்கும் ஏனைய பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களுக்கும் வன்னித்தமிழ் ஊடகவியலாளர்சங்கம் மூலம் மனிதநேய நண்பர்கள் அமைப்பின் இயக்குனர் கிருசாந்தன் மற்றும் லண்டனில் உள்ள நன்கொடையாளர் புவி ஆகியோரின் நிதிபங்களிப்புடன் 30 குடும்பங்களுக்கு ஊடக அமைப்பினால் உணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன

ஒட்டுசுட்டான் பிரதேசகலாச்சார உத்தியோகத்தர், ஊடகவியலாளர்கள் இணைந்து இப் பொதிகளை பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு சென்று பொதுமக்களிற்கு வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மல்லாகம் குளமங்கல் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண்தலைமைத்துவ குடும்பங்கள் என்பவற்றிற்கு ஊடகவியலாளர் இரா.மயூதரன் ஏற்பாட்டில் புலம்பெயர் வாழ் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

J/214 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட மல்லாகம் குளமங்கல் கிராமத்தில் உள்ள சுவாமி ஆபிரகாம் சனசமூக நிலையத்தினரது வேண்டுகோளின் அடிப்படையில் உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.



வவுனியா வடக்கில் ஊரடங்குசட்டம் காரணமாக தமது தொழிலை இழந்து வாழ்வாதாரத்திற்கு கஸ்டப்படும் மக்களிற்கு வவுனியா மாவட்டச்செயலாளர் சமன் பந்துல சேனவினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா வடக்கு அனந்தர் புளியங்குளத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன், உதவி பிரதேச செயலாளர் எஸ்.தர்மேந்திரா கிராம உத்தியோகத்தர்என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாசிவந்தீவு கிராமத்திலுள்ள வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும், சமூக சேவையாளருமான க.கமலநேசனால் 50 குடும்பத்துக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இராசமாணிக்கம் மக்கள் அமைப்பினரால் வழங்கப்பட்ட அரிசி மற்றும் வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும், சமூக சேவையாளருமான க.கமலநேசனின் நிதி பங்களிப்புடன் சேர்த்து நாசிவந்தீவு கிராமத்தில் உள்ள வறிய குடும்பங்களுககான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

இதன்போது கோறளைப்பற்று பிரதேச இளைஞர்கள், கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் எஸ்.விக்னேஸ்வரன் ஆகியோர் வீடு வீடாக சென்று உதவிகளை வழங்கினர்.